மூவாதியர் இயற்றிய
"ஐந்திணை யெழுபது" மூலமும், தமிழ்ப் புலவர் திரு. அ. நடராசபிள்ளையவர்கள் விளக்க வுரையும்

Source:
மூவாதியர் இயற்றிய "ஐந்திணை யெழுபது" மூலமும், பழைய வுரையும்
தமிழ்ப் புலவர் திரு. அ. நடராசபிள்ளையவர்கள் விளக்க வுரையும் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் திருநெல்வேலி & சென்னை

முகவுரை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள், ஐந்திணை நூற்கள் நான் கில், ஐந்திணை

யெழுபது ஒன்றாகும். இஃது அகப்பொருட்டுறை களைப் பல்லாற்றான் விளக்குமுறையில் முதன்மை பெற்ற திணை மாலை நூற்றைம்பது என்ற நூற்கு அடுத்தபடியில் வைத்து எண்ணத்தகுந்த ஏற்றத்தினைக் கொண்டுளது. இதன்கண்ணும் தொல்காப்பியர் கண்ட பல அரிய துறைகள் அழகுற்று விளங்குகின் றன. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற திணைமுறை வைப்பு இங்குக் காணப்படுகின்றது. ஒவ்வொரு திணையின்கண்ணும் பதினான்கு பாக்களாக ஐந்து திணைக்கும் எழுபது பாக்களை இந் நூல் கொண்டிருந்தமை கருதி ஐந்திணை யெழுபது என்ற காரணக் குறி இதற்கு வழங்கலாயிற்று. ஆயினும், பின்னர் நேர்ந்த ஏட்டுப் பிரதிகளின் சிதைவான் முல்லைக்கண் இரு செய்யுட்களும், நெய்தற் கண் இருசெய்யுட்களும் மறைய மிகுந்த அறுபத்தாறு செய்யுட் களும் கடவுள் வாழ்த்துச் செய்யுளுமே வெளிவரலாயின. அவற்றுள் இருபத்தேழு செய்யுட்கள் நேரிசை

வெண்பாக்களாகவும், நாற்பது செய்யுட்கள் இன்னிசை வெண்பாக்களாகவும் இயலுகின்றன. கட வுள் வாழ்த்தாகக் காணப்படும் வெண்பா, சொற்போக்காலும் பொருட்போக்காலும் பிற்காலத்தே புகுந்த தொன்றெனப் புலப்படும்.

3

திணைமாலை நூற்றைம்பதின் தெளிவாகிய இந்நூல் மக்களின் இன்பத்திற் குயிர்நிலையாகிய அன்பினை எழிலும் இனிமையுமுற எடுத்தியம்பிச்செல்லுஞ் சிறப்பினைத் தமிழ்மகனாயுள்ள ஒவ்வொரு வனும் படித்தின்புறுவது அவனுக் கேற்பட்ட பலகடமைகளிலொன் றாம். இன்பத்தின் தொடக்கமாகிய புணர்ச்சியினையும் அதற்குரிய நிமித்தங்களையும் குறிஞ்சி எனக்கூறி, அப்புணர்ச்சியாற் பெற்ற அன்பினை நெகிழவிடாது அகத்திருத்தி அமைதலாகிய முல்லையினை அடுத்துரைத்து, அவ்வன்பின்

நிலைபேற்றினைக் கண்டறிதற்குரிய பிரிவாகிய பாலையினைப் பின்வைத்து, அவற்றின் பயனாகிய ஊடலுங் கூடலுமென்ற மருதத்தினை விளக்கி, இவை பேரின்பத்தினை யண் முதற்குரிய பெருவழியேயன்றிப் பேறாகா எனத் தெளிய, இரங்கலா கிய நெய்தலினை யிறுதியிற் கூறிய வெழில் என்று மறக்கொணா மாட்சியதாகும்.

குறிஞ்சிக்கண் . தலைமகள் தலைமகனை இயற்படமொழியும் எழி லும், அதற்கேற்ப இறைச்சிப்பொருளைக் கையாளும் ஏற்றமும், சான்றவர் கேண்மையின் தன்மையும் ஆன்றவரும் கண்டு அகமகிழற் குரியனவாம். தோழி செவிலிக்குப் படைத்துமொழி கிளவியாக, தலைமகள் புணர்ச்சி காரணமாகக் கண்சிவக்கப் பெற்றமையினை, “சேந்நீ ரிழிதருங் கான்யாற்றுட், டேங்கலந்து வந்த அருவி குடைந் தாடத், தாஞ்சிவப் புற்றன கண்,” எனக் கூறுவதும், தலைமகனைத் தோழி வரைவு

கடாவுங்கால், "நாட! ஒன் றுண்டோ வறிவின்க ணின்ற மடம்," எனப் பகரும் நாகரிகமும் நெஞ்சகத்தே நீள நினைக் கற்பாலவாம். மேலும், குறிஞ்சிநிலப் பண்புகள் பல்லாற்றான் விரிக்கப்படு முறைகளும் பார்த்து மகிழற்குரியவாம்.

முல்லைக்கண் எவருஞ் செல்லா முறையாகப் பன்னிரண்டு பாக்களிலும் பருவங்கண்டழிந்த தலைமகள் கூற்றாகக் கார்கால வியல் பினையும், மாலைக்காட்சியினையும் படிப்போர் மனத்தே படக்காட்சி போற் படியுமாறு கூறுவது பலருங் கொண்டாடிக் கொள்ளவேண் டியதாகும். இருபத்திரண்டாவது செய்யுட்கண் கார்கால மாலை வேளையில் காணப்பெருங் காட்சியும், இருபத்தெட்டாவது செய் யுட்கண், மாலை வேளையில் ஆயன் பசுநிரைகளோடு மலர்மாலை சூடி வந்துகொண்டிருக்க அவன் பின்னாலே காலூன்றிப் பெய்து கொண்டே மழை தொடர்ந்து வருவதாகக் கூறிய செய்தியும்

இத் திணைக்கண், மிகச் சிறப்புற்றுக் காணப்பெறுகின்றன. குதிரைகட் குத் தவளைகளைப் போன்று ஒலிக்கும் மணிமாலைக ளிட்டிருந்த வழக்கும் இங்குக் காணப்படுகின்றது.

பாலைக்கண் போரிற் பட்ட மறவர்க்குக் கல் நடுதலும், அக்கல்லில் அம்மறவரின் செய்திகளை வரைந்து வைத்தலும், ஆந்தை யொலி தும்மல், பல்லிசொல், இடக்கண்ணாடலாகிய நிமித்த மறிதலும் பகரப்பெற்றுள்ளன. பாலைநிலவழி

பலபடியாகக் கூறப்பெற்று, பாலைக்கு நிலமின்மை தோன்ற, முல்லைகட் பாலையும் மொழியப் பட்டுளது.

மருதத்தின்கண் தலைமகன் புதல்வன்முகங்

காண்டல், புதல்வற்குப் பெயரிடுதல், பரத்தையர் தலைமகனை மாலையாற் பிணித்துக் கொண்டு போதல், எருமையின் கழுத்தில் தொண்டுக் கட்டையிடல், உறுதி மொழிகளை எழுதுவித்துக்கொளல், பாணற்குத் தலைமகள் வாயின்மறுக்கும் வகை, தோழி தலைமகனை வணங்கிய மொழியான் இணங்குவிக்கும் வாய்மை, தோழி தலைமகள் மாட்டுக் கொண்டுள்ள பேரன்பு முதலியன பெரிதும் நெஞ்சினைப் பற்றியிழுக்கும் நேர்மையனவா யுள்ளன. நாற்பத்தேழாவது செய்யுட் கண் காதலனுங் காதலியும் மாறின்றி வாழுங் காட்சியைக்கண்டு செவிலி நற்றாயிடங் கூறுங் கூற்று, பிற்காலத்தே எள்ளப்படும் சில செய்திகளும் அக்காலத்தே பெரியோர் பலராற் போற்றப்பட்டன எனப் புலனாக்குகின்றது. ஐம்பத்திரண்டாவது செய்யுட்கண் நிகழுந் தலைவிகூற்றானது தொல்காப்பியர் கண்ட பல அரிய துறைகளில் சில இந்நூலிற் காணப்படுகின்றன என்பதற்கு எடுத்துக்

காட்டாகும்.

நெய்தற்கண் தலைமகள் தலைமகனை இயற்பட மொழியும் எழிலும், அல்லகுறிபட்ட வழகும், தோழி அன்றிலொடு கூறியாறும் அமைதியும், குருகினைச் சான்றாகக் கொள்ளுமாறும், அவ்வவ்விடங்கட்கேற்ற இறைச்சிப் பொருளும் பொலிந்துள்ளன.

இந்நூலினை இயற்றிய மூவாதியர் என்ற பெரியாரைப்பற்றிய செய்தி யொன்றும் அறியுமாறில்லை, பெயர் கொண்டு இவர் சமணசமயி என ஐயுறற் கிடமுண்டாகின்றது. இந்நூலின் முதலிருபத்து நான்கு செய்யுட்கட்குமட்டும் பழைய பொழிப்புரை யொன்று காணப்படுகின்றது. அதனைச் செய்தார் செய்தியும் தெரிந்திலது. இருபத்துநான்காவது செய்யுளின் பழையவுரையின் பிற்பகுதி ஏடுகளின் சிதைவாற் காணப்பெறாது புதிதாகச்

சேர்க்கப்பட்டது. இருபத்தைந்தாவது செய்யுண்முதல் முப்பத்தாறு செய்யுட்கட்குப் புதிதாகப் பதவுரை மட்டும் எழுதிச் சேர்க்கப் பட்டது. இருபத்தெட்டாவது செய்யுட்கண், "பெயரும்" என்பதும், முப்பத்தெட்டாவது செய்யுட்கண் "கொடுவரி நல்" என்பதும் ஏடுகளின் சிதைவாற் காணப்பெறாது போயினவற்றிற்குரியவாக, முன்பின் வருமொழிகளின் துணைகொண்டு புதியனவாகச் சேர்க்கப்பட்டனவாம்.

இந்நூல் எளிய முறையில் எல்லோர்க்கும் பயன்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தினானே ஊக்குவிக்கப்பட்டுப் பதவுரை விரிவுரைகளுடன், இங்ஙனம் வெளியிட முன் வந்தமையின், இதனைக் கண்ணுறும் அறிஞர்கள் யான் அறியாமையான் மேற்கொண்டுள்ள பிழைகளை யெடுத்துக்காட்டி மன்னிக்க வேண்டுகின்றனன். தோன்றாத்துணையாக முன்னின்று இதனை

முடிப்பித்த எல்லாம் வல்ல இறைவற்கு எனது வணக்கம் உரித்தாகும். இதனை வெளியிட்டுதவிய

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கும், இதனை வெளியிடுங்கால் அன்பு கூர்ந்து பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்து உதவிய மேற்படி கழக வெளியீட்டுக் குழுவுறுப்பினரும் பாளையங் கோட்டை அர்ச் சவேரியர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரும் ஆகிய திருவாளர் வித்துவான் பு.சி. புன்னைவனநாத முதலியாரவர்கட்கும் யான் என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன்.

திருச்சி, இங்ஙனம்
2-5-'36. அ. நடராசபிள்ளை.

ஓம்

ஐந்திணை யெழுபது விளக்கவுரை பழைய பொழிப்புரையுடன்

கடவுள் வாழ்த்து.

எண்ணும் பொருளினிதே யெல்லா
முடித்தெமக்கு நண்ணுங் கலையனைத்து
நல்குமால்- கண்ணுதலின் முண்டத்தா
னண்டத்தான் மூலத்தா னாலஞ்சேர் கண்டத்தா
னீன்ற களிறு.

(பதவுரை) கண் நுதலின்- கண்ணை நெற்றியிலுடைய முண்டத்தான்- தலையினையுடையவனும், அண்டத்தான்- இவ்வுலகமாகிய அண்டத்தினைத் தனது வடிவமாகக் கொண்டவனும், மூலத்தான்- எல்லாவற்றிற்கும் முதற் காரணனாய் உள்ளவனும், ஆலம்சேர்- ஆலகால விஷமாகிய

நஞ்சு பொருந்தியிருக்கும்படியான, கண்டத்தான்-கழுத்தையுடையவனுமான சிவபெருமான். ஈன்ற- பெற்றெடுத்த, களிறு - யானைமுகக் கடவுள், எண்ணும் -யாம் விரும்பும், பொருள்- பொருள்கள், எல்லாம்- எல்லாவற்றையும், இனிது- நன்றாக, முடித்து-முடிவுபெறச்செய்து, எமக்கு- எங்களுக்கு, நண்ணும்-(இவ்வுலகத்தே) பொருந்தியுள்ள, கலை- கல்விப் பொருள்கள், அனைத்தும்- எல்லாவற்றையும், நல்கும்- கொடுக்கும்.

(விரிவுரை) ஏ- இசைநிறை. ஆல்- அசைநிலை. "களிறு எல்லாம் முடித்து, அனைத்தும் நல்கும்" என முடிக்க. "நல்குவான்" எனவும் பாடம். இச் செய்யுளின் போக்கும் பொருளும் இதனைப் புதிதாய் இடைச்செருகலென எண்ண இடமளிக்கின்றன. "தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் எய்தவுரைப்பது தற்சிறப்பு" என்றாங்கு இது

செயப்படு பொருளைக் கொண்டிராமையின்,
இது பழைய போக்காகிய

6

பாயிரமாகாமை காண்க. அன்றியும்,
இவ்வாழ்த்து இந்நூலுக் குரியதெனக் கூறற்குச்
சான்று ஒன்றும் இதன்கட் காணப்பட்டிலது.
மேலும், இதற்குப் பழைய வுரையுங்
கிடைத்திலது.

நூல்

முதலாவது -குறிஞ்சி

அவரை பொருந்திய பைங்குர லேனல்
கவரி மடமா கதூஉம் படர்சாரற்
கானக நாட! மறவல் வயங்கிழைக்
கியானிடை நின்ற புணை.
1

[தோழி தலைமகனை வரைவுகடாயது]

(பத.) அவரை- அவரைக் கொடிகள், பொருந்திய-படர்ந்து நின்ற, பைங்குரல்- பசிய கதிர்களையுடைய, ஏனல்- தினைப் பயிர்களை, கவரி மடமா- இளமையான கவரி மான்கள், கதூஉம்-பற்றி மேயும்படியான, படர்-பரந்த, சாரல்-மலைப் பக்கத்தையுடைய, கானக நாட- மலைநாட்டுத் தலைவனே! வயங்கு இழைக்கு- விளங்குகின்ற அணிகலங்களை யணிந்த தலைவிக்கும் (உனக்கும்) இடை- நடுவே, யான்- நான், நின்ற புணை-(தெய்வம் போன்று) புணையாக நின்று உங்கட்குக் கூட்டுறவு செய்வித்த நன்றியினை, மறவல்- மறவாது (தலைமகளை மணந்து என்னை) மகிழ்விப்பாயாக (என்று தோழி தலைவனிடங் கூறினாள்)

(பழைய வுரை) அவரை பொருந்திய

கதிரையுடைய பசுந்தினையைக் கவரிமடமா கதுவாநின்ற படர்ந்த சாரலினையுடைய கானகநாடனே! மறவாது நினைப்பாயாக; வயங்கா நின்ற அணியினையுடையாட்கு யான் நடுவுநின்ற புணையினை.

(விரி) கவரிமான்- ஒருவகை மான், வயங்கிழைக் கியான்- குற்றியலிகரம் அலகு பெறாமை காண்க. இச் செய்யுளினை இளம் பூரணர் வரைவு நீட்டித்தவழித் தோழி தலைவற்குக் கூறிய தென்பர். (தொல். பொருள். கள.1) நம்பியகப்பொருளில் இது பாங்கியிற் கூட்டத்தின் பின் பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல் எனப்படும். (அகப். கள.33.) வரைவு கடாதல்- மணம் புரிந்து கொள்ளும்படி தூண்டுதல். கதூஉம்- சொல்லிசை யளபெடை. (1)

கொல்லைப் புனத்த வகில்சுமந்து கல்பாய்ந்து
வானி னருவி ததும்பக் கவினிய
நாட னயமுடைய னென்பதனா னீப்பினும்
வாடன் மறந்தன தோள்.
2

[வரைவு தலைவந்தமை கண்டு மகிழ்ந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.]

(பத) வானின்- மழையினாலே (பெருக்கெடுத்த) அருவி-நீர் வீழ்ச்சியானது, கல் பாய்ந்து- மலைகளிலிருந்து இறங்கிச் சென்று, கொல்லை புனத்த-- தோட்டமாகிய தினைப்புனத்தின்கண்ணே யுள்ள, அகில் சுமந்து- அகிற்கட்டைகளை மேற்கொண்டு, ததும்ப-எங்கும் நிரம்ப (அதனாலே), கவினிய -அழகு மிகுந்த, நாடன்-மலை நாட்டிற்குரிய தலைமகன், நயம் உடையன்- வாய்மை முதலிய நற் பண்புகள் வாய்ந்துள்ளான்., என்பதனால்- என்ற இதனாலே, நீப்பினும்-(அவன் பொருள்

தேடல் காரணமாக என்னை இந் நெடு நாளாய்ப்) பிரிந்து சென்றிருந்தும் , தோள்-என் தோள்கள், வாடல்- (வருத்தத்தால்) மெலிதலை, மறந்தன-மேற்கொள்ளாவாயின (என்று தலைவி தோழியினிடங் கூறினாள்)

(பரை) கொல்லைப்புனத்த அகிலைச் சுமந்து கற்களைப் பாய்ந்து மழையானுளதாய அருவி முழங்குதலான் அழகு பெற்ற நாடன் தன்னை யடைந்தார்க்கு ஈரமுடையன் என்பதனான் அவன் பிரிந்தானாயினும் வாடுதலை மறந்தன உன்

(விரி) கல்-மலை, ததும்பல்-நிறைதல், நயம்-வாய்மை இரக்க முதலிய நற்பண்புகள். வரைவு தலைவரல்- தலைமகனைச் சார்ந்தார் மணம் பேசி வரல். தலைமகனைத் தலைமகள் நயமுடையன் என்றதனால் வரைவு தலைவந்தமை பெறலாயிற்று. தலைவனின் வாய்மை முதலிய நற்பண்புகள் தலைவிக்கு

அவன் வரைவுகாரணமாகப் பொருள்வயிற் பிரிந்த காலத்தும் மனக்கலக்கத்தை விலக்கிய வென்பார், "நீப்பினும் வாடன் மறந்தன தோள்" என்றார். இச்செய்யுளை இளம்பூரணர், வரைவு தலைவந்தவழித் தலைமகள் கூறியதற்கு மேற்கோளாகக் கூறுவர். (தொல்.பொருள். கள.21) நச்சினார்க்கினியர், 'நீப்பினும்' என்றதனால் தலைமகன் மாட்டுப் பரத்தமை கூறினாள் என்பர். வரைவுக்குப் பின்னர் கற்பில் பரத்தமை கூறல் சிறப்பாமன்றிக் களவின்கட் பரத்தமை கூறலும் செயலுங் காதற் புணர்ச்சிக்கு மாறாமாகலான், 'நீப்பினும்' என்றதற்கு வரைவுகாரணமாக முலைவிலைக்குப் பொருள் தேடப் பிரிந்தமை கூறப்பட்டது. இது தோழி முதலாயினார் அறத்தொடு நின்று தலைமகளின் வரைவினை எதிர் நோக்கிய காலத்து வரைவு கூறியதாகும். (2)__________

இலையடர் தண்குளவி யேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்த ளினவண் டிமிரும்
வரையக நாடனும் வந்தான்மற் றன்னை
அலையு மலைபோயிற் றின்று.
3

[தோழி தலைமகன் வரைவு மலிந்தமை
தலைமகட்குச் சொல்லியது.]

(பத) இலை- தழைகள், அடர்-நிறைந்துள்ள, தண்- குளிர்ந்த, குளவி- காட்டு மல்லிகைக் கொடிகள், ஏய்ந்த-பொருந்திப் படர்ந்துள்ள, பொதும்பில்- சோலைகளினிடத்தேயுள்ள, குலையுடை- கொத்துக்களாகவுள்ள, காந்தள் - காந்தள் பூவினிடத்தே, இனம் வண்டு - கூட்டமாகிய வண்டுகள், இமிரும் - ஒலித்து மொய்க்கும்படியான, வரையகம் - மலையிடத்தையுடைய, நாடனும் – நாட்டிற்குரியவனாகிய தலைமகனும், வந்தான்

- மணம் பேசி வருதலை மேற் கொண்டான், (அதனால்) அன்னை - நம் செவிலித்தாய், அலையும் - (வரைதலை வேண்டி) வருந்துகின்ற, அலை - வருத்தமானது, இன்று - இப்பொழுதே, போயிற்று - நீங்கியது. (என்று தோழி தலைவியிடங் கூறினாள்.)

(ப-ரை.) இலை பயின்ற தண்குளவிக் கொடிகள் படர்ந்து மூடிய பொதும்பின்கட் பூங்கொத்தையுடைய காந்தளில் இன வண்டுகள் ஒலிக்கும் வரையகநாடனும் வரைவொடு வந்தான்; ஆதலான், இன்று நமக்கு அன்னை யலைக்கும் அலையும் போயிற்று.

(விரி.) "வேய்ந்த," எனவும் பாடம். மற்று அசைநிலை. வரைவு மலிதல் - மணப் பேச்சினை மேற்கொண்டுவரல். இதனைத் தலைவி கூற்றாக வரைவு மலிந்தமை கண்டு மகிழ்ந்தது

எனக் கூறுவாருமுளர். (3)

மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுவந்து மந்தி முலைவருடக் - கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்.
4

[தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.]

(பத.) மந்தி - குரங்கானது, மன்ற - மன்றின்கண் நின்றுள்ள, பலவின் - பலாமரத்திலே, சுளை - பலாச் சுளைகள், விளை - முதிர்ந்துள்ள, தீம்பழம் - தித்திப்பான பலாப் பழத்தை, உண்டு - தின்று, வந்து - (நீர் வேட்கையோடு) கீழிறங்கிவந்து, ஆமா - (அம்மரத்தடியிற் றங்கியிருந்த) காட்டுப்

பசுக்களின், முலை- பான் மடியை, வருட- தடவிக்கொடுக்க, கன்று அமர்ந்து- கன்றினிடத்துப்போல அன்புபட்டு, சுரக்கும்- (அப் பசுக்கள் பால்) சுரந்து கொடுக்கும்படியான, அணி- இயற்கையழகுக் காட்சிகள் மிக்க, மலைநாடனை- மலைநாட்டிற்குரிய தலைமகனை, யாம் ஆ- யாம் இப்பிறப்பில் உயிரோடு உள்ளேமாகும் வரைக்கும், பிரிவது- (அவனைப்) பிரிந்து வாழ்வது, இலம்- மேற்கொளமாட்டேம் (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்)

(ப-ரை) மன்றின்கண் நின்ற பலவின் சுளைமுதிர்ந்த இனிய பழத்தைத் தின்றின்புற்று வந்து ஆமாவின் முலையை மந்தி வருட, அவ்வாமாத் தன் கன்றிற்குப்போல அன்பு பட்டுப் பாலைச்சுரக்கும் அணிமலைநாடனை யாமுளேமாகப் பிரிவதிலம்.

(விரி) மன்று- மக்கள் முதலோர் சென்று

தங்குமிடம். 'அமர்ந்து' என்றும் பாடம். அமாத்தல்- அன்பு படல்; பழங்கால வழக்கு. தலைமகன் சிறைப் புறத்தானாக- பாங்கியிற் கூட்டத்தினின்றும் பிரிந்த தலைமகன் தினைப்புனஞ் செல்லும் தோழியினையும் தலைவியையும் சோலையின் வேலிப்புறத்து நின்று நோக்கினனாக. இயற்பழித்தல்- தலைவனின் அன்பாகிய இயல்பினைக் குறைத்துக் கூறல். இயற்பட மொழிதல்- அன்பாகிய இயல்பு பொருந்துமாறு கூறல். தலைமகன் அன்பிற்குறையா னென்பது மந்தி முலைவருட ஆமா சுரக்கும் அணிமலை நாடன் என்றதனாற் பெறப்படும். இதனை அளிசிறந்தவழித் தலைவி கூறிய தென்பர் இளம்பூரணர். (தொல். பொருள். கள. 21) (4)

சான்றவர் கேண்மை சிதைவின்றா யூன்றி
வலியாகிப் பின்னும் பயக்கு மெலிவில்
கயந்திகழ் சோலை மலைநாடன் கேண்மை
நயந்திகழு மென்னுமென் னெஞ்சு.

[இதுவுமது]

(பத) என் நெஞ்சு -எனது மனமானது, சான்றவர்- நற் பண்புகள் நிறைந்த பெரியோர்களுடைய, கேண்மை- நட்பானது, சிதைவின்றாய்- கேடுறுதலின்றி, ஊன்றி- நிலைபெற்று, வலியாகி- (அடைந்தவர்க்கு) வன்மைமிக்க துணையாகி, பின்னும்-

மேலும், பயக்கும்- பலவித நன்மைகளை யுண்டாக்கும். (அது போல) கயம்- நீர்நிலைகளானே, திகழ்- வளத்துடன் காணப்படும், சோலை- பூஞ்சோலைகளுடைய, மலை நாடன்- மலைநாட்டிற்குரிய தலைமகனது, கேண்மை- நட்பானது, மெலிவு

இல்- குறைதலின்றி, நயம் திகழும்- இன்பமிகுந்து விளங்கும், என்னும்- என்று கருதாநின்றது. (என்று தலைவி தோழியிடங் கூறினாள்)

(ப-ரை) அமைந்தாருடைய நட்புச் சிதைதலின்றி நிலை பெற்று அடைந்தார்க்கு வலியாகி மறுமையின்கண்ணும் பயனைச் செய்யும், அதுபோல, நீராற் றிகழாநின்ற சோலையையுடைய மலை நாடனுடைந நட்பு மெலிவின்றி இன்பத்தைத் திகழ்விக்கும் என்னா நின்றது என்னெஞ்சு.

(விரி) கயம்- நீர், நீர்நிலை (குளம்) மெலிவு-வருத்தமுமாம். மெலிவில் நயம்- துன்பங்கலவாத இன்பம். (5)

பொன்னிணர் வேங்கை கமழு நளிசோலை
நன்மலை நாட! மறவல் வயங்கிழைக்கு
நின்னல தில்லையா லீயாயோ கண்ணோட்டத்

தின்னுயிர் தாங்கு மருந்து.
6

[புணர்ந்து நீங்குந் தலைமகனைக் கண்டு தோழி வரைவுகடாயது]

(பத) பொன்- பொன்போன்ற, இணர்- பூங்கொத்துக்களையுடைய, வேங்கை- வேங்கைமரங்கள், கமழும்- மணக்கும்படியான, நளி-குளிர்ந்த, சோலை- பூஞ்சோலைகள் மிகுந்த, கல் மலை நாட- நல்ல மலைநாட்டிற் குரிய தலைமகனே! மறவல்- (தலைமகளை) மறவாது காப்பாயாக, வயங்கு இழைக்கு- விளங்குகின்ற அணி கலங்களை யணிந்த தலைமகளுக்கு, நின் அலது- நின்னையல்லாமல், இல்லை- (உதவும் உறவினர் எவரும்) கிடையாது, ஆல்- ஆகலின், கண் ஓட்டத்து- நின் அருட் பார்வையால், இன் உயிர்- இனிய உயிரை, தாங்கு- நிலை பெறுவிக்கும், மருந்து- மருந்து போன்ற மணவினையை, ஈயாய்- (நீ அவளுக்குக்)

கொடுத்து அவளைக் காப்பாற்றுவாயாக. (என்று தோழி தலைமகனிடங் கூறினாள்)

(ப-ரை) பொன் போன்ற பூங்கொத்தையுடைய வேங்கை கமழாநின்ற குளிர்ந்த சோலையையுடைய நன்மலை நாடனே! மறவா தொழிவாயாக.; வயங்கிழைக்கு

நின்னல்லது ஓரரணில்லையாதலால்? நின் கண்ணோட்டத்தான் இன்னுயிரைத் தாங்கு மருந்து நல்காயோ!

(விரி) புணர்ந்து நீங்கும் -பாங்கியிற் கூட்டத்தாற் றலைவியைக் கூடிப் பிரியும். ஓ- இசை நிறை; வினாவுமாம். (6)

காய்ந்தீய லன்னை! இவளோ தவறில
ளோங்கிய செந்நீ ரிழிதருங் கான்யாற்றுட்
டேங்கலந்து வந்த வருவி குடைந்தாடத்
தாஞ்சிவப் புற்றன கண்.
7

[பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்துமொழி கிளவியாற் றோழி வரைவுகடாயது]

(பத) அன்னை- அன்னாய்! ஓங்கிய- சிறப்புமிக்க, செந்நீர்- சிவந்த நீரானது, இழிதரும்-வழிந்தோடும்படியான, கான்யாற்றுள்- (மலையூடேசெல்லும்) காட்டாற்றினிடத்தே, தேம்- தேனானது, கலந்து வந்த- கலக்கப்பெற்று ஓடிய, அருவி- நீர்வீழ்ச்சியில், குடைந்து ஆட- (தலைமகள்) மூழ்கி விளையாடியபடியால், கண்- (அவளுடைய) கண்கள், சிவப்புற்றன-

சிவக்கலாயின, (ஆதலால்), இவளோ- இத்தலைமகளோ, தவறிலள்- யாதுந் தவறிய நிலையில் உள்ளவளல்லள், காய்ந்தீயல்- (வீணே எங்களைச்) சினந்து மொழி யல் வேண்டா. (என்று தோழி செவிலித்தாயிடங் கூறினாள்)

(ப-ரை) வெகுள வேண்டா அன்னாய்!- குற்றமிலள் இவள்; மிக்க சிவந்த நீர் தாழ்ந்தோடுங் கான்யாற்றுள் தேனோடுங் கலந்து வந்த அருவிநீரைக் குடைந் தாடுதலான் இவள் கண்கள்தாஞ் சிவப்புற்றன; ஆதலான்.

(விரி) அன்னை- அண்மைவிளி. தாம்- அசைநிலை. பகற் குறி- தோழி யினுதவியால் பகற்கண்ணே தலைமகனைத் தலைமகள் கண்டு கூடுமிடம், இது தினைப்புனத்தின் அருகிலுள்ள சோலையாகும், அங்குச் சென்று திரும்பிய தலைமகள் தினைப்புனத்தின் கண்ணே தன்னைக் காணவந்த செவிலித்தாயினைக் கண்டு திகைத்து நின்றாள். செவிலி

தலைமகளைக் கண்டு அவள் கண்கள் சிவப்புற்றமைக்குக் காரணம் யாதென வினவினள். இந்நிலையினைத் தலைமகன் தினைப்புன வேலியின் வெளிப்புறமாக நின்று நோக்கிக் கொண்டிருந்தனன். அப்பொழுது தோழி தலைமகட்குப் புணர்ச்சியா லுண்டாகிய கட்சிவப்பினை அருவியாட்டத்தா லுண்டாய தெனச் செவிலிக்குக் கூறி,

12

தலைமகனுக்கும் தலைமகளை விரைவில் வரைந்து கொள்வது நன்றெனப் புலப்படக் கூறிய செய்யுளாகுமிது. படைத்து மொழி கிளவி- புதிதாக வொன்றை அமைத்துக் கூறும் சொற்றொடர். காய்ந்தீயல்- வியங்கோள் வினை முற்று. (7)

வெறிகமழ் தண்சுனைத் தெண்ணீர் துளும்பக்
கறிவளர் தேமா நறுங்கனி வீழும்

வெறிகமழ் தண்சோலை நாட! ஒன் றுண்டோ
வறிவின்க ணின்ற மடம்.
8

[புணர்ந்து நீங்குந் தலைமகனைக் கண்டு தோழி வரைவுகடாயது]

(பத) கறி வளர்- மிளகு கொடிகள் வளர்ந்து படர்ந்துள்ள, தே மா தித்திப்பான மாவினது, நறும்- நல்ல, கனி- பழமானது. வெறி கமழ்- மண நாறும்படியான, தண்- குளிர்ந்த, சனை- சுனையின்கணுள்ள, தெள் நீர்- தெளிந்த நீரானது, துளும்ப- அலையும்படி, வீழும்- விழும்படியான, வெறி கமழ்- நறு நாற்ற மிக்க, தண்- குளிர்ந்த, சோலை- சோலைகள், சூழ்ந்த நாட, -நாட்டிற்குரிய தலைமகனே! அறிவின்கண்- (சிறந்தோனாகிய நினது) நல்லறிவினிடத்தே, நின்ற- (பிறர் எடுத்துக் கூறும்படி) தங்கியுள்ள, மடம்- அறியாமையாகிய , ஒன்று- ஒரு பொருள், உண்டோ-

காணப்படுமோ? (காணப்படமாட்டாது. ஆகலின், அறிவாளியாகிய நினக்குத் தலைமகளை நீ விரைந்து மணம்புரிய வேண்டு மென்பதை விளக்க வேண்டுவதின்று, என்று தோழி தலைமகனிடங் கூறினாள்)

(ப-ரை) விரை கமழாநின்ற குளிர்ந்த சுனையின்கண் தெளிந்த நீர் துளும்ப மிளகு படர்ந்து வளராநின்ற இனிய மாவினது நறுவிய கனி வீழும் வெறிகமழ் தண்சோலை நாடனே! நின் அறிவின்கண் நின்றதொரு பேதைமை யுண்டோ?

(வி ீ) தன்னேரில்லாத தலைமகனாதலின், தோழி, "நாட! ஒனறுண்டோ வறிவின்கணின்ற மடம்" எனக் குறிப்பாக வரைவு கடாயினள். சுனை மலையின்கண்ணுள்ள நீர்நிலை. கறி- குறிஞ்சி நிலக் கருப்பொருள். (8)

மன்றத் துறுகற் கருங்கண் முசுவுகளுங் குன்றக
நாடன் றெளித்த தெளிவினை நன்றென்று
தேறித் தெளிந்தேன் றலையளி

யொன்றுமற் றொன்று மனைத்து.
9

[தலைமகன் சிறைப்புறத்தானாக இற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது]

(பத) மன்றத்து- பலர் கூடும் வெளியில், உறு கல்- பொருந்தியுள்ள கற்களில், கரும் கண்- கரிய கண்களையுடைய, முசு- முசு என்னும் ஒருவகைக் குரங்குகள், உகளும்- குதித்து யாடும் , குன்று அக நாடன்- மலைகளைத் தன்னிடத்தே கொண்ட நாட்டுக் குரிய தலைமகன், தெளிந்த- (இயற்கைப் புணர்ச்சிக் காலத்தே யான்

தெளிவுறும்படி என்னை) தெளிவித்த, தெளிவினை- தெளிவாகிய தலைமகனுக்கும் எனக்கு மேற்பட்ட கூட்டப் பெருமையினை, நன்று என்று- (எதிர்கால வாழ்க்கையிற் பெரிய) நன்மையினைத் தரக்கூடிய ஒன்றென்று, தேறி- அறிந்து, தெளிந்தேன்- தீர்மானித்தேன், (அப்படித் தீர்மானித்த எனக்கு) தலை அளி- (அன்று அவன் காட்டியது) மிகுந்த அன்பாகிய, ஒன்று- ஒன்றாக வுளது, ஒன்றும்- அவ் வொன்றும், அனைத்து- எக்காலும் அத்தன்மையினின்றும் மாறாது என்னைக் காக்கும். (ஆகலின், நீ வீணே தலைமகனின் தன்மையினைப் பழித்துக் கூறவேண்டா எனத் தலைமகள் தோழியிடங் கூறினாள்)

(ப-ரை) மன்றங்களிலே நெருங்கிய கல்லின்கண் கருங்கண் முசுக்கள் குதிபாயுங் குன்றகநாடன் என் மனத்தைத் தெளிவித்த தெளிவினைப் பிழையாதென்று தேறினேற்கு அவன், செய்த தலையளியொன்று; அவ்

வொன்றும் அப்பெற்றித்தாய்ப் பழுதாகாது.

(விரி) மன்றத் துறுகல்- பலர்கூடும் வெளியில் பலரும் அமர்தற் குரியதாகப் பொருந்திய கற்கள் எனலுமாம். உறு கல்- மிகுந்த கற்கள் எனும் பொருளில் உரிச்சொற் றொடருமாம். மற்று- அசைநிலை. (9)

பிரைசங் கொளவீழ்ந்த தீந்தே னிறாஅன்
மரையான் குழவி குளம்பிற் றுகைக்கும்
வரையக நாட! வரையாய் வரினெந்
நிரைதொடி வாழ்த லிலள்.
10

[தோழி தலைமகளைக் கண்டு வரைவுகடாயது]

(பத) பிரைசம்- தேனினை, கொள- வேடுவர்

கைக் கொண்டு செல்ல, வீழ்ந்த- வீழ்ந்து கிடக்கும்படியான, தீம் தேன் இறால்- தித்திப்பான தேனிறால்களை, மரையான்- மான்களின், குழவி- கன்றுகள், குளம்பின்- தம் காற் குளம்புகளினாலே, துகைக்கும்- மிதித்து உழக்கும்படியான, வரை அக நாட- மலைகளைத் தன்னிடத்தே கொண்ட நாட்டிற்குரிய தலைமகனே! வரையாய்- (நீ தலைமகளை விரைந்து) மணந்து கொள்வாயாக. வரின்- (அங்ஙனம் வரையாது களவுப் புணர்ச்சியினையே விரும்பி) வந்து கொண்டிருப்பாயாயின், எம் நிரைதொடி- எங்கள் நிரைதொடியாகிய தலைமகள், வாழ்தல் இலள்- (வருத்த மிகுதியால்) உயிர் வாழ்தலின்றி மடிவள். (என்று தோழி தலைமகனிடங் கூறினாள்)

(ப-ரை) தேறலைப் பிறர் கொள்ள வீழ்ந்த தீந்தேன் இறால்களை மரையான்கன்று குளம்பால் உழக்கும் வரையக நாடனே! நீ

வரையாது வருவாயாயின், எங்கள் நிரைதொடி உயிர்வாழாள்.

(விரி) பிரைசம்- பிரசம்- தேன். ; அகர ஐகார இடைப்போலி. இறாஅல்-இசைநிறை யளபெடை. வரையாய்-ஏவலொருமை வினைமுற்று. அன்றி, எதிர்மறை முற்றெச்சமுமாம். நிரை தொடி- கூடி நெருங்கிய வளையல்களை யணிந்த தலைமகள்: வினைத்தொகை யன்மொழி. (10)

கேழ லுழுத கரிபுனக் கொல்லையுள்
வாழை முதுகாய் கடுவன் புதைத்தயருந்
தாழருவி நாடன் றெளிகொடுத்தா னென்றோழி
நேர்வளை நெஞ்சூன்று கோல்.
11

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் கேட்பத் தோழி தலைமகனை இயற்பழித்தது.]

(பத) கேழல்- பன்றிகள். உழுத- கொம்பினாலே கிளறி விட்டுள்ளதும். கரி- (வேடுவர்களாலே சுட்டுக்) கரியப் பெற்றதுமான, புனக் கொல்லையுள்- தினைப்புனமாகிய நிலத்தினிடத்தே, கடுவன்- ஆண் குரங்குகள், வாழை முதுகாய்- வாழையின் முதிர்ந்த காய்களை (ப் பழுப்பிக்கவேண்டி) புதைத்து- புதைத்து வைத்து, அயரும்- (புதைத்த விடந் தெரியாமல்) வருத்தமுறும்படியாக, தாழ் அருவி- (அத்தினைப்புன வழியாகப் பெருக்கெடுத்துத்) தாழ்ந்து செல்லும்படியான நீர்வீழ்ச்சிகளையுடைய, நாடன்- நாட்டிற்குரிய தலைமகன், என் தோழி- என்னுடைய

உயிர்ப்பாங்கியாகிய, நேர்வளை- நல்ல வளையலணிந்த தலைமகளின், நெஞ்சு- மார்பினிடத்தே, ஊன்று- தைத்த, கோல்- அம்பு

போன்ற, தெளி- தெளிவாகிய உறுதி மொழிகளை, கொடுத்தான்- கொடுத்துவிட்டான் (என்று தோழி கூறினாள்)

(ப-ரை.) பன்றிகள் கொம்பினால் உழுத சுட்டுக்கரிந்த புனக் கொல்லையுள் வாழையின் முதிர்ந்த காயைக் குரங்கினுட் கடுவன்கள் அப்புழுதியிற் புதைத்தயருந் தாழ்ந்த அருவிகளையுடைய நாடன் என் றோழியாகிய நேர்வளைக்கு அக்காலத்து நெஞ்சூன்று கோலாகத் தெள்ளிய வஞ்சினங் கூறினான்.

(விரி.) தலைமகன் வரைவு நீட்டித்தவழி அது பொறாத தோழி வருத்த மிகுதியாற் கூறியதாகு மிது. நேர்வளை- வினைத்தொகையன்மொழி. கோல்" என்றமையான், இயற்பழித்ததாயிற்று. (11)

பெருங்கை யிருங்களி றைவன மாந்திக்
கருங்கான் மராம்பொழிற் பாசடைத் துஞ்சுஞ்
சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை

பொருந்தினார்க் கேமாப் புடைத்து.

"நேர்வளை நெஞ்சூன்று 12

[தலைமன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது]

(பத) பெரும் கை- பெரிய துதிக்கையினையுடைய, இரும்- பெரிய, களிறு- ஆண் யானையானது, ஐவனம்- மலை நெற்பயிரை, மாந்தி- தின்றுவிட்டு, கரும் கால்- கரிய அடிப்பாகத்தையுடைய, மராம்- மராமரங்கள் நிறைந்த, பொழில்- சோலையினிடத்தேயுள்ள, பாசு அடை- பசிய இலைகளா லுண்டாகிய நிழலினிடத்தே, துஞ்சும்- உறங்க இடமாயதும், சுரும்பு- வண்டினங்கள், இமிர்- ஒலிக்கின்ற, சோலை- பூங்காக்கள் நிறைந்துள்ளதுமாகிய, மலை-

மலைகளால் சூழப்பட்ட, நாடன்- நாட்டிற்குரிய தலைமகனின், கேண்மை- நட்பானது, பொருந்தினார்க்கு- அவளை நெருங்கி வாழ்வார்களுக்கு, ஏமாப்பு உடைத்து- பாதுகாவலாகப் பொருந்தும் பண்பினைக் கொண்டதாம். (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்)

(ப-ரை) பெருங்கையையுடைய இருங்களிறு ஐவன நெல்லைத் தின்று, கருங்காலையுடைய மராம்பொழிலிற் பச்சிலைநிழலிற் றுயிலும் வண்டுகள் ஒலிக்கும் சோலைமலை நாடன் கேண்மை பொருந்தினார்க்கு ஏமாப்புடைத்து.

16

(விரி) பொருந்தினார்- காதலிமார்கள். "களிறு துஞ்சும் மலை, சுரும்பிமிர் சோலைமலை" எனக் கூட்டுக. "கேண்மை பொருந்தினார்க்கு ஏமாப்பாகப் பொருந்துதலையுடைத்து" என

முடிக்க. (12)

வார்குர லேனல் வளைவாய்க் கிளைகவரு
நீராற் றெளிதிகழ் காநாடன் கேண்மையே
யார்வத்தி னார முயங்கினேன் வேலனு
மீர வலித்தான் மறி.
13

[வெறியாட் டெடுத்துக் கொண்டவிடத்துத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.]

(பத) (தோழியே) வார்- நீண்ட, குரல்- கதிரினையுடைய ஏனல்- தினையினை, வளை- வளைந்த, வாய்- வாயினையுடைய, கி(ள்)ளை- கிளிகள், கவரும்- பற்றிக்கொண்டு செல்லும், நீரால்- தன்மையினாலே (என்னையன்மார் என்னைத் தினைப்புனக் காவலின் கண் நிறுத்த அதனாலே,) தெளு - விளக்கமாக, திகழ் – விளங்கா நின்ற, கா - சோலைகளையுடைய,

நாடன் - நாட்டிற்குரிய தலைமகனது, கேண்மையே - நட்பொன்றினையே, ஆர்வத்தின் - காதலுடனே, ஆர - மிகுதியும், முயங்கினேன் - மேற்கொண்டன்ன். (அதனால், என் மேனியிற் சிறிது மாற்ற முண்டாயது; உண்டாகவே, அது தெய்வத்தானாயது என்று கருதி,) வேலனும் - (வெறி யாடுபவனாகிய) வேல் கைக்கொண்ட தேவராளனும், மறி ஆட்டுக் குட்டியினை, ஈர - (முருகற்குப்) பலியாகக் கொடுத்து வெறியாட, வலித்தான் - துணிந்துவிட்டான். (ஆகலின், நீ சென்று உண்மையை யுரைத்து அதனை விலக்குவாயாக, என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்.)

(ப-ரை.) நீண்ட கதிரினையுடைய பசுந்தினையை வளைவாய்க் கிளியினம் கவரும் நீரானே தெளிந்து திகழாநின்ற சோலைகளையுடைய மலைநாடன் கேண்மையைக் காதலினாலே நிரம்ப மேவினேன்; பிரிதலாற்றே னாயினேன்;

அவ்வாற்றாமை தெய்வத்தினாயது என்று
முருகற்கு மறியை யறுக்கத் துணிந்தான்
வேலோன்; தோழி; இதனை விலக்குவாயாக.

(விரி.) வெறியாட் டெடுத்தல் - வேலற்குப்
பூசையிடல்; அறத்தொடு நிற்றல் -
உண்மையினை எடுத்துச் சொல்லித் தவறாகக்
காரியங்களை நிகழ வொட்டாது

நடத்தல். கிளை - கிள்ளை - கிளி : இடைக்குறை விகாரம்.
வேலனும் – உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. (13)

குறையொன் றுடையேன்மற் றோழி! நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல்வேண்டு மின்னே
யராவழங்கு நீள்சோலை நாடனை நம்மி
லிராவார லென்ப துரை.

17

ஏகாரம் - பிரிநிலை.

14

[தலைமகன் வரும்வழியின் ஏதத்திற்குக் கவன்ற தலைமகள் வரைவு வேட்டுத் தோழிக்குச் சொல்லியது]

(பத) தோழி- தோழியே. குறை ஒன்று- நின்னால் முடிக்கப் பெற வேண்டிய காரிய மொன்;று, உடையேன்- என்பாலுளது. (அஃது யாதென்றால்) நிறை இல்லா- (மனக்கவற்சியால்) ஒருவழி நிற்றலைச் செய்யாத, மன் உயிர்க்கு- என்பாலுள்ள எனதுயிர்க்கு, ஏமம்- பாது காவலை, செயல் வேண்டும்- நீ செய்து என்னைப் பாதுகாக்க வேண்டும் என்பதாம். (அஃதெங்ஙனமெனின்) நீள் சோலை- நீண்டு வளர்ந்த மரங்களையுடைய சோலைகள் சூழ்ந்த, நாடனை- நாட்டிற்குரிய தலைமகனை, இன்னே-இப்பொழுதிருந்தே, அரா வழங்கு- பாம்புகள் நடமாடுகின்ற (சுற்றுப்புறத்தினையுடைய,) நம் இல்- (இரவுக் குறியாகிய) நம் வீட்டுப்புறத்தே, இரா வாரல்- இராக்காலத்து வருதல் வேண்டா.

(வரைவினைக் கைக்கொண்டு பகற்பொழுதே வருதல் வேண்டும்,) என்பது- என்ற செய்தியை உரை- சொல்வாயாக. (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்.

(ப-ரை) நின்னான் ஒரு காரிய முடையேன், தோழி! நிலையில்லாத என் மன்னுயிர்க்கு அரணஞ் செய்யவேண்டும்; இப்பொழதே பாம்புகளான் வழங்கப்படகின்ற நீண்ட சோலையையுடைய நாடனை நம்மனையின்கண் இரா வரவேண்டா என்பதனைச் சொல்.

(விரி) மற்று- அசைநிலை. ஏ- பிரிநிலை. ஏதம்- துன்பம். வேட்டல்- விரும்பல். தலைவன் அரா வழங்கு இற்புறம் வந்து செல்வது தலைவிக்குப் பெருந்துயர் விளைக்காநின்ற தென்பார், "நிறையில்லா மன்னுயிர்க் கேமஞ் செயல் வேண்டும்" என்றார். (14)

குறிஞ்சி முற்றும்.

இரண்டாவது -- முல்லை.

செங்கதிர்ச் செல்வன் சினங்கரந்த போழ்தினாற்
பைங்கொடி முல்லை மணங்கமழ--வண்டிமிரக்
காரோ டலமருங் காரவானங் காண்டொறு
நீரோ டலமருங் கண்.
15

[பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

(பத.) செம் கதிர்--செம்மையாகிய கதிர்களையே, செல்வன்-- செல்வமாகக் கொண்ட கதிரவன், சினம்--தனது சீற்றமாகிய வெப்பத்தை, கரந்த போழ்தினால்--

மறைத்துக்கொண்ட மாலைப் பொழுதின்கண், பை கொடி--பசிய கொடிகளையுடைய, முல்லை-- முல்லைச் செடிகள், மணம் கமழ--(பூத்து) மணத்தை வீசுதலானே, வண்டு இமிர--வண்டுகள் சூழ்ந்து ஒலிக்க, (வந்த,) கார் ஓடு--கார் காலத்துடனே. அலமரும்-- சுழன்று காணும்படியான, கார்--முகில்களையுடைய, வானம்--விசும்பினை, காண் தொறும்--காணுகின்ற வேளைகளிலெல்லாம். கண்-என் கண்கள், நீர் ஓடு-- நீரினோடுங்கூட, அலமரும்-- தடுமாறி வருந்தாநின்றன (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்.)

(ப-ரை.) செய்ய கதிரினையுடைய செல்வன் சீற்றமடங்கிய காலத்தின்கண் பசுங்கொடியையுடைய முல்லைகள் பூத்து மணங் கமழ்தலான் வண்டுகள் ஒலிக்கக் கார்ப்பருவத்தோடு தடுமாறுகின்ற முகில்களையுடைய வானங் காணுந்தோறும் நீரோடுங்கூடத் தடுமாறா நின்றன கண்கள்.

(விரி.) பருவம்-கார் காலம், முல்லைக்கு மாலையாகிய சிறுபொழுது சிறந்து, முல்லை பூக்க வருதலின், "செல்வன் சினங் கரந்த போழ்து," என்பதனை மாலை யெனக் கொள்ளலாயிற்றென்க.
போழ்தினால்--வேற்றுமை மயக்கம்.
கார்--முல்லைக்குரிய பெரும் பொழுது. அலமரும்--அலமர முதனிலை. (15)

தடமென் பணைத்தோளி! நீத்தாரோ வாரார்
மடநடை மஞ்ஞை யகவக்-கடன்முகந்து
மின்னொடு வந்த தெழில்வானம் வந்தென்னை
யென்னாதி யென்பாரு மில்.
16

[இதுவுமது.]

(பத.) தடம்-பெரிய, மெல்-மெல்லியவாகிய, பணை-மூங்கி வினை யொத்த, தோளி-தோள்களையுடைய தோழியே! நீத்தாரோ-நம்மைப்) பிரிந்து சென்றவராகிய தலைவரோ, வாரார்-(இப் பொழுது) வருகின்றவராகத் தோன்றவில்லை, (ஆனால்) எழில் வானம்-அழகிய முகிலோ, மடம் நடை-மெதுவான நடையினையுடைய, மஞ்ஞை- மயில்கள், அகவ-களித்துக் கூப்பிட, கடல் முகந்து-கடனீரைக் குடித்து, மின் ஓடு-மின்னல்களுடனே, வந்தது-வந்துவிட்டது, வந்து என்னை-என் பக்கலிற் சேர்ந்து என்னை நோக்கி, என் ஆதி-நீ எங்ஙனம் வாழ்கின்றனை? உன்னிலையாது? என்பாரும்-என்று என்பால் இரங்கி என் செழுமையை வினவுகின்றவரும், இல்- இல்லாது தனியே வருந்துகின்றனன் (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்).

(ப-ரை.) பெரியவாய் மெல்லியவாகிய

மூங்கில்போன்றிருந்த

தோளினையுடையாய்! நம்மைத் துறந்தார் இக்காலத்து வருகின்றிலர்; மெல்லிய நடையினையுடைய மயில்கள் அழைக்கக் கடன் முகந்து மின்னுடனே வந்தது, எழிலினையுடைய வானம்; ஆதலால், பின்னையும் என்னை வந்து, "நீ என் செய்யக் கடவாய்!" என்றிரங்கி ஒன்றைச் சொல்லுவாருமில்லை.

(விரி.) வானம்-இடவாகுபெயர்.
என்பாரும்-உம்மை இறந்தது தழுவியது.
பணைத்தொளி-உவமைத்தொகை யன்மொழி;
அண்மைவிளி கொண்டுள்ளது. (16)

தண்ணறுங் கோட றுடுப்பெடுப்பக் காரெதிரி
விண்ணுயர் வானத் துருமுரறத்-திண்ணிதிற்
புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும்.
17

[இதுவுமது]

(பத.) சிறுமாலை-சிறு பொழுதாகிய அந்திவேளை, தண்- குளிர்ந்த, நறும்- மணத்தினையுடைய, கோடல்-வெண்காந்தளானது, துடுப்பு-துடுப்பினைப் போன்ற அரும்புக்குலைகளை, எடுப்ப-ஏந்திக்கொண்டு நிற்க, கார்-கார்காலத்தை, எதிர் கொண்டு, விண் உயர்-விண் வெளியிலே உயர்ந்து திரியும்படியான, வானத்து-முகில்களிடத்திலேயுள்ள, உரும்-இடிகள், உரற்ற- இடித் தொலிக்க, திண்ணிதின் -

20

நன்றாக, புல்லுநர்-தழுவிக் கொள்பவர்களாகிய காதலரை, இல்லார்-பிரிந்தவர்களாகிய காதலிமார்கள், நடுங்க-(துன்பமிகுதியாற்

றுயருற்று) நடுங்கும்படியாக, கொல்லுநர் போல-கொலையாளிகளைப் போன்று, வரும்-வாரா நின்றது (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்0.

(ப-ரை.) குளிர்ந்த நறுங்கோடல் துடுப்புப்போலப் பூக்குலைகளை யேந்த, கார்காலத்தை ஏன்றுகொண்டு முகில்கள்மிக்க வானத் தின்கண் உருமேறு ஒலிப்பத்திண்ணிதாக முயங்குவாரை யில்லாதார் நடுங்கும் வகை துன்பத்தைக் செய்ய மாலை கொல்வாரைப் போல வாராநின்றது.

(விரி.) துடுப்பு-உவமையாகுபெயர். தலைமகள் தலைமகனைச் சார்ந்து தழுவவிற் பெரிதுங் கருத்துடையாள் என்பார், "திண்ணிதிற் புல்லுநரில்லார்," என்றார். (17)

கதழுறை வானஞ் சிதற விதழகத்துத்

தாதிணர்க் கொன்றை யெரிவளர்ப்பப் பாஅ
யிடிப்பது போலு மெழில்வான நோக்கித்
துடிப்பது போலு முயிர்.
18

[இதுவு மது]

(பத) வானம்- முகில்கள், கதழ்- விரைவாக, உறை- மழைத்துளிகளை, சிதற- சிதறிப் பெய்ய, அகத்து- உள்ளிடத்தே, இதழ்- இதழ்களையும், தாது- பூந்தாதுகளையுமுடைய (மொட்டுக்கள் நிறைந்த,) இணர்- பூங்கொத்துக்களையுடைய, கன்றை- கொன்றை மரங்கள், எரி வளர்ப்ப - நெருப்பினைப் போன்று மலர்ந்து காண, பாய்- பரந்து, இடிப்பது போலும்- இடித்துரைப்பதுபோல முழங்கும், எழில்- அழகினையுடைய, வானம்- வான் வெளியினை, நோக்கி- யான் பார்த்தால், உயிர்- எனதுயிரானது, துடிப்பது போலும்- வருந்தித் துயருறுவதுபோலாநின்றது (என்று தலைமகள்

தோழியிடங் கூறினாள்.)

(ப-ரை) விரைந்து துளிகளை முகில்கள் இதழகத்தே சிதற, தாதினையுடைய பூங்கொத்துக்களையுடைய கொன்றைகள் எரி நிறத்தை மிகுப்ப, பரந்து கழறுவது போலும் எழில் விசும்பைக் காணுந்தோறும் வருந்தித் துடிப்பது போலாநின்றது என் உடலம்.

21

(விரி) பாஅய்- இசைநிறை யளபெடை. நோக்கி-காரணப் பொருளில் வந்த வினையெச்சம். போலும்-முன்னது உவமவுருபு; பின்னது ஒப்பில் போலி. உயிர் தானியாகுபெயராய் உடலினையுமுணர்த்தும்.

ஆலி விருப்புற் றகவிப் புறவெல்லாம்
பீலி பரப்பி மயிலாலச்- சூலி
விரிகுவது போலுமிக் காரதிர வாவி

யுருகுவது போலு மெனக்கு.

[இதுவு மது]

(18)

19

(பத.) மயில்- மயிலினங்கள்,
ஆலி-மழைத்துளிகளை, விருப் புற்று-
காதலுடனே , அகவி- கூவியழைத்துக் கொண்டு,
புறவு எல்லாம்- முல்லை நிலமாகிய எல்லாப்
பாகங்களிலும், பீலி- தோகைகளை, பரப்பி-
விரித்து, ஆல- ஆடும்படி, சூலி-கருக் கொண்டு,
விரிகுவது போலும்- (அக்கருவினை வெளியிட)
விரிந்து கொடுப்பது போல மின்னுகின்ற,
இக்கார்-இந்த முகிலானது, அதிர- முழங்க,
(அதனால்,) எனக்கு- எனது, ஆவி-உயிரானது,
உருகுவதுபோலும்- உலையிலிட்டு உருகப்
பெற்றது போல வருந்தா நிற்கும் (என்று

தோழியிடந் தலைமகள் கூறினாள்.)

(ப-ரை) மழைத்துளிகளைக் காதலித்தழைத்துக் காடெலாந் தோகைகளைப் பரப்பி மயிலினங்கள் ஆட, கருக்கொண்டு விரிகுவது போலும் இக்கார் முழங்க எனக்கு என் உயிர் உருகுவது போலா நின்றது.

(விரி.) எனக்கு- உருபு மயக்கம். போலும்- முன்னது பெயரெச்சம்; பின்னது உவம வுருபு. (19)

இனத்த வருங்கலை பொங்கப் புனத்த
கொடிமயங்கு முல்லை தளிர்ப்ப விடிமயங்கி
யானு மவரும் வருந்தச் சிறுமாலை
தானும் புயலும் வரும்.
20

[இதுவுமது]

(பத.) இனத்த- கூட்டமான, அரும்- அரிய, கலை- ஆண் மான்கள், பொங்க- களித்துத் திரியவும், புனத்த-கொல்லைகளிலுள்ள, கொடிமயங்கு- கொடிகள் கலந்து படர்ந்துள்ள, முல்லை- முல்லைச் செடிகள், தளிர்ப்ப- தழைக்கவும், யானும்- நானும், அவரும்- (என்னைப் பிரிந்து தங்கியுள்ள) என் காதலரும், வருந்த- துன்புறும்படியாகவும், சிறு மாலை- சிறு பொழுதாகிய மாலைவேளையானது, இடி மயங்கி- இடித்தலடு கூடி, தானும் புயலும்- தானும் முகிலுமாக, வரும்- வாராநிற்கும் (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்.)

(ப-ரை.) இனங்களையுடைய கலைகள் களித்து மிக, புனங்களி லுள்ள, கொடிமிடைந்த முல்லை தளிர்ப்ப, இடியோடே கூடமிடைந்து, யானும் என் காதலரும் வருந்த, துன்பத்தைச்

செய்யும் மாலை தானும் மழைப்பெயலும் எம்மேல் வாராநின்றன.

(விரி.) களி பொங்க, முல்லை தளிர்ப்ப, யானும் அவரும் வருந்த, சிறுமாலை மயங்கி, வரும் என முடிக்க. இனத்த புனத்த- குறிப்புப் பெயரெச்சங்கள். (20)

காரிகை வாடத் துறந்தாரும் வாராமுன்;
கார்கொடி முல்லை யெயிறீனக் -காரோ
டுடன்பட்ட வந்தலைக்கு மாலைக்கோ
வெம்மின்
மடம்பட்டு வாழ்கிற்பா ரில்.
21

[இதுவுமது.]

(பத.) துறந்தாரும்- நம்மைப் பிரிந்துசென்ற தலைவரும், வாராமுன்- வருவதற்கு முன்பே,

கார்- மழையினாலே செழித்த, கொடி- கொடிகளையுடைய, முல்லை-முல்லைச் செடியானது, எயிறு- நம் பற்கள் போன்ற முல்லை முகைகளை, ஈன- தோற்றுவிக்க (அதனாலே) காரிகை- நமது அழகு, வாட- குறைந்து போகும்படி, கார் ஓடு- கார்காலத்துடனே, உடன்பட்டு- ஒன்று கூடி, வந்து- தோன்றி, அலைக்கும்- நம்மை வருத்தும், மாலைக்கு- மாலையின்பொருட்டாக, எம் இன்- நம்மைப்போல, மடம்பட்டு- அறியாமையால் துன்புற்று, வாழ்கிற்பார்- உயிர்வாழ் உரனுள்ளவர்கள், இல்- இல்லை (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்.)

(ப-ரை) எம்மழகு சுருங்க எம்மை நீங்கினாரும் வருவதற்கு முன்னே கருங்கொடியையுடைய முல்லைகள் நல்லார் எயிறு போல அரும்பக் காரோடு உடனே

யுளதாய் வந்து எம்மை நலிகின்ற மாலைக்கு எம்மைப்போல வலியிழந்து மெலிவாற்றி யிருந்து உயிர் வாழ்வார் இல்லை.

(விரி.) ஓ- அசைநிலை. கில்- ஆற்றலிடைநிலை. எம்மின்: இன் ஒப்புப் பொருளது.

(21)

கொன்றைக் குழலூதிக் கோவலர்
பின்னிரைத்துக்
கன்றம ராயம் புகுதர- வின்று
வழங்கிய வந்தன்று மாலையாங் காண
முழங்கிவிற் கோலிற்று வான்.
22

[இதுவு மது]

(பத) கோவலர்- இடையர்கள், கொன்றை குழல்-கொன்றைப்பழத்தைத் துருவித் துளைத்துச் செய்த குழலினை, ஊதி- ஒலித்துக்கொண்டு, பின்- பின்னாக, நிரைத்து- வரிசையாகநின்று செல்ல, கன்று- தங் கன்றுகளை, அமர்- விரும்பிய, ஆயம்- பசுக் கூட்டங்கள், புகுதர- ஊர்க்கண்ணே புகுந்து செல்ல, மாலை –அந்தி வேளையானது, இன்று-இப்பொழுது, வழங்கிய- (தன்னரசினைச்) செலுத்தும்பொருட்டு, வந்தன்று- வந்தது, வான்- முகிலும், யாம்- நாம், காண-கண்டு வருந்தும்படி, முழங்கி- ஆரவாரித்து, வில்- வானவில்லினாலே, கோலிற்று- (பெய்யவேண்டிய இடத்தை) வளைத்துக்கொண்டு பெய்யத் தொடங்கிற்று (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்)

(ப-ரை) கொன்றை யென்னாநின்ற குழலூதி, கோவலர் பின்னே நிரைத்து நிற்க, கன்றை

விரும்பிய நிரையாயங்கள் ஊர் தோறும் புக, இவ்விடத்தின்கண் வழங்கவேண்டி வந்தது மாலை; யாம் இறந்துபடாதிருந்து நாணும்படி முழங்கி வில்லைக் கோலிற்று மழை.

(விரி) நிரைத்து- நிரைக்க: எச்சத்திரிபு, வந்தன்று- அன்சாரியை பெற்று வந்த இறந்த கால வினைமுற்று. இன்று- காலப் பொருள்தரு மிடைச்சொல்; அன்றி இடப்பொருள் கருதியதுமாம். பழையவுரையில், "நிற்க" என்ற மொழி ஏட்டுப் பிரதியின் சிதைவாற் காணப் பெறாது போகப் புதிதாய்க் கருதிக்கொண்டதாம். (22)

தேரைத் தழங்குகுரற் றார்மணி வாயதிர்ப்ப
வார்கலி வானம் பெயறொடங்கிக் -கார்கொள
வின்றாற்ற வாரா விடுவார்கொல் காதல
ரொன்றாலு நில்லா வளை.

[இதுவுமது]

(பத) (தோழியே!) ஆர்கலி-மிக்க வொலியினையுடை

24

23

_ய, வானம்- முகிலானது, பெயல்

தொடங்கி- பெய்தலை மேற் கொண்டு, கார் கொள- கார்ப்பருவத்தைக் கொள்ளுதலினாலே, வளை- என் கைகளிலுள்ள வளையல்களில் , ஒன்று ஆலும்- ஒன்றாயினும், நில்லா- நிற்காது கழன்று வீழாநின்றது, காதலர் -நம் தலைவர், தேரை- தவளைகளைப் போன்று, தழங்கு- ஒலிக்கின்ற, குரல்- ஒலியினையுடைய, தார்மணி- குதிரைகளின் கழுத்தில் மாலையாக விடப்பட்டுள்ள மணிகள், வாய் அதிர்ப்ப - ஒலிக்கும்படி (தேரிலமர்ந்து) இன்று- இற்றை நாளில், ஆற்ற-நாம் பொறுத்துக் கொள்ளும்படியாக, வாரா-வருதலைச் செய்யாது, விடுவார்கொல்- (நம்மை

வருந்தும்படி) விட்டுவிடுவாரோ? (என்று தலைமகள் தோழியை வினவினள்)

(ப-ரை) ஓசையையுடைய முகில்கள் பெயலைத் தொடங்கிக் கார்ப்பருவத்தைக்கொள்ள, நம் காதலர் தேரை போன்ற தழங்கு குரலையுடைய குதிரைத் தார்மணிகள் வாயதிர்ப்ப, இன்று நாம் ஆற்றியுளமாம் வகை வாராது விடுவார்கொல்லோ? தோழீ! நம்வளை யாதும் நிற்கின்றது இல்லையால்.

(விரி) கொல்- ஐயப் பொருள் கொண்டுளது. ஒன்றானாலும் எனற்பாலது ஒன்றாலும் எனலாயது. நில்லா- ஈறுகெட்ட எதிர்மறை யொன்றன்பாற் குறிப்பு வினைமுற்று. (23)

கல்லேர் புறவிற் கவினிப் புதன்மிசை
முல்லை தளவொடு போதவிழ-வெல்லி

யலைவற்று விட்டன்று வானமு முண்கண்
முலைவற்று விட்டன்று நீர்.
24

[இதுவுமது]

25

(பத.) கல்- கற்கள், ஏர்- எழுந்து காணும்படியான, புறவில்- முல்லை நிலத்தின்கண்ணே, கவினி- அழகுடன் கூடி, புதல் மிசை- புதர்களிடத்தே, முல்லை- முல்லைச் செடிகள், தளவு ஒடு- செம் முல்லைச் செடிகளுடனே, போது அவிழ- மலரும்படியாக, வானமும்- முகிலும், எல்லி- இரவு முழுவதும், அலைவு அற்று- பின் வாங்கலின்றி, நீர்-மழைத்துளிகளை, விட்டன்று- பெய்தது. உண் கண்- மையுண்ட என் கண்ணும், (நீர்)- கண்ணீர்த்துளிகளை, முலை- முலைகளின்மீதே, வற்றுவிட்டன்று- வடித்துக்கொண்டிராநின்றது

(என்று தலைமகள் தோழியிடங் கூறி வருந்தினள்.)

(ப-ரை.) கல்லெழுந்து கிடந்த கானத்தின்கண் அழகு பெற்றுப் புதல்கண்மிசை முல்லைகளும் செம்முல்லைகளும் பூக்கண் மலர, இரவின்கண் முகிலும் அலைவற்று விட்டன நீரினை; மையுண் கண்களும் உண்கண்மிசை வடித்தன நீரினை.

(விரி.) ஏர்- ஏர்பு- எழுதல்: முதனிலைத் தொழிற்பெயர். அலைவு- வருந்தல்; சளைத்துப் பின்வாங்குதல். 'நீர்' என்பதனையீரிடத்தும் கூட்டுக. பழையவுரையினிடத்தே பெரிய எழுத்துக்களிற் காண்பன ஏட்டுப் பிரதிகளின் சிதைவாற் காணப் பெறாமற் போகப் பின்பு புதியனவாய்க் கருதிக்கொண்டனவாம். வற்றுவிடல்- வடிதல். (24)

(இருபத்தைந்து, இருபத்தாறாவது
செய்யுட்கள் பழம் பிரதிகளிற் காணப்
பெறாவாய் மறைந்தன.)

கார்ப்புடைப் பாண்டில் கமழப் புறவெல்லா
மார்ப்போ டினவண் டிமிர்ந்தாட-நீர்த்தின்றி
யொன்றா தளைக்குஞ் சிறுமாலை மாறுழந்து
நின்றாக நின்றது நீர்.
27

[இதுவுமது]

(பத.) கார்ப்பு-மழையினை, உடை-உடைய,
பாண்டில்- வாகைமரங்கள், கமழ-பூத்து
மணக்கவும், புறவு எல்லாம்-முல்லை
நிலங்களின் எல்லாப் பாகங்களிலும், இனம்
வண்டு- வண்டுக் கூட்டங்கள், ஆர்ப்பு
ஓடு-ஆரவாரிப்புடனே, இமிர்ந்து-ஒலித்துக்
கொண்டு, ஆட-திரியவும், நீர்த்து

இன்றி-பெருந்தன்மை முதலிய
நற்குணங்களில்லாமல், ஒன்றாது-பகைத்து,
அலைக்கும்- என்னை வருத்தும்,
சிறுமாலை-சிறு பொழுதாகிய

26

மாலைக்காலம், மாறு-(எனக்கு) மாறாக,
உழந்து-முயன்று, நின்று ஆக-நிற்க,
(அதனாலே), நீர்-கண்ணீரானது,
நின்றது-கண்களில் நிலையாகத் தங்கலாயிற்று.
(என் செய்வேன்! என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்.)

(விரி.) இச்செய்யுண்முதல் பின்வருஞ் செய்யுட்கள் நாற்பத்திரண்டுக்கும் பழையவுரை கிடைக்கவில்லை. தலைமகள், மாலையானது தனிமைப்பட்ட பெண்பாலாகிய தன்னை வருத்துகின்ற தென்பாள், "நீர்த்தின்றி யொன்றாது அலைக்குஞ் சிறுமாலை

எனலாயினள். (27)

குருந்தலை வான்படலை சூடிச் சுரும்பார்ப்ப
வாயன் புகுதரும் போழ்தினா னாயிழாய்!
பின்னொடு நின்று பெயரும் படுமழைகொ
லென்னொடு பட்ட வகை.
28

[இதுவுமது]

(பத.) ஆய் இழாய்-ஆராய்ந்து செய்யப்பட்ட அணிகலன்களை யணிந்த தோழியே! ஆயன்-இடையன், குருந்தலை-மிகச் சிறந்த, வான் - பெரிய, படலை-பூமாலையினை, சூடி-அணிந்து, சுரும்பு- வண்டினங்கள், ஆர்ப்ப-(சூழ்ந்து) ஆரவாரிக்க, புகுதரும்-(ஆனிரையோடு மனைக்கண்ணே) சேருகின்ற, போழ்து இன் ஆன் - வேளையாகிய மாலைக்காலதிலே, என் ஓடு-என் பால், பட்ட-தோன்றிய, வகை-(வருத்தமிக்க)

இப்போக்கானது, பின் ஒடு-அவ்வாயன் பின்னாக, நின்று-(தோன்றி) நிலைபெற்று, பெயரும்-ஊர்ந்து வரும்படியான, படு மழை கொல்-பெய்யும் மழையினாலே தோன்றியதோ? (என்று தலைமகள் தோழியினிடம் வினவினள்.)

(விரி.) ஆயிழை-வினைத்தொகை யன்மொழி. போழ்தினான், என்னோடு-வேற்றுமை மயக்கங்கள். படுமழை-வினைத் தொகை. கொல்-ஐயப்பொருள் தரு மிடைச்சொல். "பெயரும்," என்ற சொல் ஏட்டுப்பிரதியின் சிதைவாற் காணப்பெறாது போலப் புதிதாய்க் கருதிக்கொண்டதாகும். (28)

முல்லை முற்றும்.

மூன்றாவது-பாலை

எழுத்துடைக் கன்னிரைக்க வாயில்
விழுத்தொடை
யம்மா றலைக்குஞ் சுரநிரைத் தம்மா
பெருந்தகு தாளாண்மைக் கேற்க வரும்பொரு
ளாகுமவர் காத லவா.
29

[தலைமகன் செலவினைத் தலைமகட்குத் தோழி உணர்த்தியது.]

(பத.) பெரும் தகு-பெருமையினையும் தகுதியினையுமுடைய, தாளாண்மைக்கு-ஊக்கத்திற்கு, ஏற்க-பொருத்தமாக, அரும் பொருள்-அருமையான பொருளாக, ஆகும் அவர்-(விருப்ப மிகுதியால்) மாறிடுந் தலைவரின். காதல் அவா-மிக்க விருப்ப மானது, எழுத்து உடை-பெயர்கள் முதலிய குறிக்கப்பெற்ற, கல்-நடு கற்கள், நிரைக்க-வரிசையாக நடுவதற்கு, வாயில்- காரணமாகிய,

விழு தொடை-சிறப்பாக அம்பு தொடுக்குந் தொடையாலே, அ மாறு பழைமையாகிய தம் பகைவர்களை, அலைக்கும்- (மறவர்கள்) வருத்தற்கு இடமாகிய, சுரம் நிரைத்து-பாலை நிலவழி யிலே ஒழுங்காகச் செல்லுதலையுடையது (என்று தோழி தலைமகளிடங் கூறினாள்.)

(விரி.) செலவு-பொருள் வயிற் பிரிந்து செல்லுஞ் செலவு. காதல் அவா-ஒரு பொருட் பன்மொழி. விற்போர் முதலியவற்றில் வல்ல வீரர்கட்கு மட்டுமே அக்காலத்துக் கல்நட்டுச் சிறப்புச் செய்தல் மரபாகலான், “எழுத்துடைக்கன்னிரைக்க வாயில் விழுத்தொடை,” எனப்பட்டது. அம்மா-வியப்பிடைச் சொல். அ- பண்டறிசுட்டு. (29)

வில்லுழு துண்பார் கடுகி யதரலைக்குங்
கல்சூழ் பதுக்கையா ரத்தத்திற் பாரார்கொன்

மெல்லியல் கண்ணோட்ட மின்றிப்
பொருட்கிவர்ந்து
நில்லாத வுள்ளத் தவர்.
30

[தலைமகனின் செலவுடன்படாத தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

(பத.) மெல் இயல்-மெல்லிய தன்மையாகிய, கண்ணோட்டம்-இரக்கமாகிய பண்பு, இன்றி-இல்லாமல், பொருட்கு- பொருள் தேடுதற்கண், இவர்ந்து-விருப்புற்று, நில்லாத-நம்மிடத்திலே நிலை பெறாத, உள்ளத்தவர்-நெஞ்சினைக்கொண்ட தலைவர், வில்- வில்லினாலே, உழுது-முயன்று போர் புரிந்து, உண்பார்- (அதனால் வரும் பொருளைக் கொண்டு) உண்டு பிழைக்கும் மறவர்கள், கடுகி-விரைந்து, அதர் அலைக்கும்-வழிச் செல்வாரை வருத்திக் கொள்ளையடிக்கும்படியான, கல் சூழ்-கற்கள்

சூழ்ந்துள்ள,

பதுக்கை-சிறு தூறுகள், ஆர்-நிறைந்த, அத்தத்தின் - பாலைநில வழியின் கொடுமையினை, பாரார் கொல்-நினைத்துப் பார்க்கமாட்டாரா? (என்று தலைமகள் தோழியை வினவினள்.)

(விரி.) கொல்-ஐயப்பொருள் தரு மிடைச்சொல். பதுக்கை- சிறு பாறையெனலுமாம்.
(30)

பேழ்வா யிரும்புலி குஞ்சரங் கோட்பிழைத்துப்
பாழூர்ப் பொதியிற் புகாப்பார்க்கு மாரிடைச்
சூழாப் பொருணசைக்கட் சென்றோ
ருருணினைந்து
வாழ்தியோ மற்றோ வுயிர்!

{பொருள்வயிற் பிரிந்து போய தலைமகனைக் காய்ந்து தலைமகள் தானே கூறிக்கொண்டது.}

(பத.) உயிர் - எனது ஆருயிரே! பேழ்வாய் - பிளந்த வாயினையுடைய, இரும்புலி - பெரிய புலியானது, குஞ்சரம் - யானையினை, கோள் - கொள்ளுதலினின்றும், பிழைத்து - தவறிப்போய், பாழ் ஊர் - (மறவர்தம் கொள்ளையாற்) பாழ்பட்ட ஊரினது, பொதியில்- மன்றத்தின்கண், புகா - புகுந்து, பார்க்கும் - (உணவினை) நாடி நிற்கும்படியான, ஆர் இடை - அரிய பாலைநில வழியே, சூழா - நெருங்கி, பொருள் நசை கண் - பொருள் தேடவேண்டுதலினாலே, சென்றோர் - பிரிந்து சென்ற தலைவரது, அருள் - தண்ணளியினை, நினைந்து - இன்னும் எதிர் பார்த்து, வாழ்த்தியோ - (மடியாது) வாழ விரும்புகின்றனையோ? (என்று தலைமகள்

தன்னுயிருடன் வினவினள்.)

(விரி.) பகா, சூழா - 'செய்யா,' என்னும் வாய்பாட்டு வினை யெச்சங்கள். நசைக்கண் - வேற்றுமை மயக்கம். மற்று, ஓ - அசை நிலைகள். உயிர் - அண்மைவிளி கொண்டது.

நீரி லருஞ்சுரத் தாமா னினம்வழங்கு
மாரிடை யத்த மிறப்பர்கொ லாயிழாய்!
நாணினை நீக்கி யுயிரோ டுடன்சென்று
காணப் புணர்ப்பதுகொ னெஞ்சு.

(31)

32
29

[பிரிவுணர்த்தி தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது]

(பத.) ஆய் இழாய் - ஆராய்ந்து செய்யப்பட்ட அணிகலன்களை யாணிந்த தோழியே! நெஞ்சு - என் மனமானது, நாணினை - வெட்கத்தினை, நீக்கி - துறந்து, உயிரோடு - (சாதலில்லா) உயிரினோடு, உடன் சென்று - கூடிப் போய், காண - தலைவரினைப் பார்க்க, புணர்ப்பது - விரும்புவதாயுள்ளது, (அங்ஙனமிருக்க) நீர் இல் - உண்ணுதற்குத் நீர் கிடைக்காத, அரும் சுரத்து - அரிய பாலை நிலத்தின் கண்ணே, ஆமான் - காட்டுப் பசுக்களின், இனம் - கூட்டமானது, வழங்கும் - (நீரின்றித் தியங்கித்) திரியும், ஆர் இடை -அரிய இடத்தையுடைய, அத்தம் - வழியின்கண்ணே, இறப்பர் கொல் – கடந்து செல்வாரோ? (என்று தலைமகள் தோழியை வினவினள்.)

(விரி.) கொல் - முன்னது ஐயவினாப் பொருளது; பின்னது அசைநிலைப் பொருளது. புணர்ப்பது - குறிப்புவினை முற்று. (32)

பொறிகிளர் சேவல் வரிமரற் குத்த
நெறிதூ ரருஞ்சுரநா முன்னி - யறிவிட்
டலர்மொழி சென்ற கொடியக நாட்ட
வலனுயர்ந்து தோன்று மலை.
33

[வரைவிடைப் பிரிவில் ஏதிலார் கூறு மலர்கண்டு தலைமகள் ஆற்றாது தோழி கேட்பக் கூறியது]

(பத.) பொறி கிளர் - தலைச் சூட்டான் விளங்காநின்ற, சேவல் - காட்டுக் கோழியானது, வரி - வரிகளையுடைய, மரல்-மருள் செடியினை, குத்த - கொத்துதலினாலே, நெறி-வழியானது, தூர் - தூர்ந்து போகும்படியான, அரும் சுரம் - அரிய பாலைநில வழியின் கொடுமையினை, நாம் உன்னி - நாம் நினைத்து வருந்துதலால, அறிவு இட்டு- (ஏதிலார்

நம்களவினை) அறிந்து கூறும்படியான, அலர் மொழி - பழிச்சொற்கள், மலை அகம் - மலையினிடத்தே, நாட்ட- நாட்டப் பெற்ற, அ கொடி - அக்கொடிச்சீலையினைப் போன்று, சென்று- பரவி, வலன் உயர்ந்து - வலமாகச் சுழன்று எழுந்து, தோன்றும் - தோன்றாநிற்கும் (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்.)

30

(விரி.) வரை விடைப் பிரிவு - தலைமகளை மணத்தல் வேண்டி முலைவிலைக்காகப் பொருள் தேடுவான் தலைமகன் மேற்கொண்ட

பீரிவர் கூரை மறுமனைச் சேர்ந்தல்கிக்
கூருகி ரெண்கி னிருங்கிளை கண்படுக்கு
நீரி லருஞ்சுர முன்னி யறியார்கொ
லீரமி னெஞ்சி னவர்.

பிரிவு. அலர் - பழி மொழிகள். (33)

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது]

(பத.) ஈரம் இல்- நம்மீது இரக்கமென்பதைக் கொள்ளாத நெஞ்சினவர்- மனத்தைக் கொண்டவராகிய நந்தலைவர், பீர்,- பீர்க்கங் கொடிகள், இவர்- மேலேறிப்படர்ந்துள்ள, கூரை- மேற் பாகத்தினையுடைய, மறு மனை- பாழ் வீடுகளில், கூர் உகிர்- கூர்மையான நகங்களையுடைய, எண்கு இன்- கரடியினது, இரும் கிளை- பெரிய கூட்டம், சேர்ந்து- கூடி, அல்கி- ஒருங்கி, கண்படுக்கும்- உறங்கும்படியான, நீர்இல்- வறண்ட, அரும் சுரம்- அரிய பாலை நிலத்தின் கொடுமையினை, உன்னி- நினைத்துப்பார்த்து, அறியார் கொல்- (தன் செலவு வேண்டா வொன்றென) தெரியமாட்டாரா? (என்று தலைமகள் தோழியிடம் வினவினள்.)

(விரி.) மறு- குற்றம்: பாழ். கொல்- ஐயவினாப் பொருள்.

சூரற் புறவி னணில்பிளிற்றுஞ் சூழ்படப்பை
பூர்கெழு சேவ லிதலொடு- போர்திளைக்குந்
தேரொடு கானந் தெருளிலார் செல்வார்கொ
லூரிடு கவ்வை யொழித்து.

[இதுவுமது.]

(34)

(பத.) தெருள் இலார்- (பொருளினும் அருளே போற்றும் பண்பினது என்னுந்) தெளிவினை மேற்கொண்டிராத நங்காதலர், சூரல்- பிரப்பம்புதர்கள் மிகுந்த, புறவின்- காட்டினிடத்தே, அணில்- அணிற்பிள்ளைகள், பிளிற்றும்- ஒலிக்கும்படியான, படப்பை சூழ்-

கொல்லைகளாற் சூழப்பெற்ற, ஊர்-
பாலைநிலத்தூர்களில், கெழு-

பொருந்தியுள்ள , சேவல்- ஆண் கோழியானது,
இதல் ஒடு- காடைப்பறவையுடனே,
போர்திளைக்கும்- சண்டை செய்யும்படியான,
கானம்- பாலைநிலவழியே, தேர் ஒடு-
தேரின்மீதே, ஊர் இடு- இவ்வூரில் நமக்கு
இட்டுச் செய்யவேண்டிய, கவ்வை- காரியத்தை,
ஒழித்து-விட்டுவிட்டு, செல்வார்கொல்- நம்மைப்
பிரிந்து போவாரோ? (என்று தலைமகள்
தோழியை வினவினள்.)

(விரி.) படப்பை- கொல்லை; தோட்டம். "புறவி
னணில் பிளிற்றுஞ் சூழ்படப்பையூர்,"
என்றமையின் இது முல்லைக்கண் வந்த பாலை யென்க.
தேரொடு- உருபுமயக்கம். (35)

முள்ளுடை மூங்கில் பிணங்கிய சூழ்படப்பை
புள்ளி வெருகுதன் குட்டிக் கிரைபார்க்குங்
கள்ளர் வழங்குஞ் சுரமென்பர் காதல

ருள்ளம் படர்ந்த நெறி.

கொல்- ஐய வினாப் பொருள்.

36

[தலைமகன் பொருள்வயிற் பிரிந்த காலத்து ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவ லென்பது பட மொழிந்தது]

(பத.) காதலர்- நந்தலைவரின், உள்ளம்- மனமானது, படர்ந்த-(பொருள் தேடுதலை மேற்கொண்டு) சென்ற, நெறி-வழியானது, முள் உடை- முட்களையுடைய, மூங்கில்- மூங்கிற் புதர்கள், சூழ்- சூழ்ந்து, பிணங்கிய- பின்னிக்கொண்டு கிடக்கும்படியான, படப்பை- தோட்டத்தினிடத்தே, புள்ளி- புள்ளிகளையுடைய, வெருகு-

காட்டுப்பூனையானது, தன்குட்டிக்கு- தனது குட்டிக்கு, இரை பார்க்கும்- உணவினைத் தேடித் திரிதலோடு, கள்ளர்- ஆறலைப்போர், வழங்கும்- சஞ்சரிக்கும், சுரம் என்பர்- கொடிய பாலைவனம் என்று சொல்லுவர் பலர் (என்று தலைமகள் தோழியிடங் கூறினள்.)

(விரி) காதலர் உள்ளம் படர்ந்த நெறியானது வெருகு தன் குட்டிக் கிரை பார்க்கும் கள்ளர் வழங்குஞ் சுரமாதலின், அவர் செல்லாது மீள்வர் என்பது தலைவி கருத்து. (36)

வருநுதல் யானை பிடியோ டுறங்கு
மெரிமயங்கு கானஞ் செலவுரைப்ப நில்லா
வரிமயங் குண்கண்ணு ணீர்.
37

[பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி உடன்படாது தலைமகட்குப் பின்னர் நேரும் இன்னலினை எடுத்தியம்பியது.]

(பத.) (எம்பெருமானே!) பொரி- பொரிந்த, புறம்- மேற் பாகத்தைக் கொண்ட, ஓமை- மாமரத்தினது, புகர் படு- அழகு பொருந்திய, நீழல்- நிழலினிடத்தே, வரி- நீளமான, நுதல்- நெற்றியினையுடைய, யானை- களிறானது, பிடி ஓடு- பெண்யானையுடனே, உறங்கும்- தூங்குதற்கு இடமாயதும், எரி- காட்டுத் தீயானது, மயங்கும்- கலந்து காண்பதற்கு இடமாயதுமாகிய, கானம்- காட்டினிடத்தே, செலவு- (நீர் பொருள்வயிற் பிரிந்து) செல்லுதலை, உரைப்ப- (தலைமகண்மாட்டு யான்) சொல்லுதலான், வரி- கரிய ரேகைகள், மயங்கு- கலக்கப்பெற்று, உண் கண் உள்- மைதீட்டப்பெற்ற (தலைமகளின்) கண்களில், நீர்- கண்ணீரானது, நில்லா- தங்காது

வடியாநிற்கும் (என்று தலைமகனிடத்தில் தோழி கூறினாள்.)

(விரி.) இன்னல்- துயரம். நில்லா- ஈறுகெட்ட எதிர்மறை ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று. நீழல்- நீட்டல் விகாரம். (37)

கோள்வல் கொடுவரி நல்வய மாக்குழுமுந்
தாள்வீ பதுக்கைய கான மிறந்தார்கொ
லாள்வினையி னாற்ற வகன்றவா நன்றுணரா
மீளிகொண் மொய்ம்பி னவர்.
38

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.]

(பத.) கோள் வல்- (மான் முதலியவற்றைக்) கொள்ளுதலில் வல்ல, கொடு வரி- வளைந்த வரிகளையும், நல்- நல்ல, வயம்-

வெற்றியினையுமுடைய, மா- விலங்காகிய புலிகள், குழுமும்- கூடித் திரியும், வீ- பூக்கள் நிறைந்த, தாள்- அடிப்பாகத்தினை யுடைய, பதுக்கைய- புதரினையுடைய, கானம்- காடாகிய பாலை நிலவழியின்கண்ணே, மீளி கொள்- வீரத்தினைக் கொண்ட, மொய்ம்பினவர்- வலிமை மிக்க காதலர், ஆள்வினையின்- முயற்சி யினிடத்தே, ஆற்ற- மிகுதியுங் கொண்ட, அவா- விருப்பத்தினாலே, நன்று உணரா- (இங்குத் தங்குதலாலேற்படும்) நன்மையினை அறியாமல், அகன்று- (நம்மைப்) பிரிந்து, இறந்தார்கொல்- சென்றனரோ? (எனத் தலைமகள் ஐயுற்றுத் தோழியை வினவினள்.)

(விரி.) "கொடுவரிநல்" என்பது ஏட்டுப் பிரதியின் சிதைவாற் காணப்பெறாது புதிதாய்க் கருதிக் கொண்டதாகும். கொல்- ஐயப் பொருள்தரு மிடைச்சொல். உணரா- ஈறு கெட்ட

எதிர்மறை வினையெச்சம். (38)

கொடுவரி பாயத் துணையிழந் தஞ்சி
கடுவுணங்கு பாறைக் கடவு தெவுட்டு
நெடுவரை யத்த மிறப்பர்கொல் கோண்மாப்
படுபகை பார்க்குஞ் சுரம்.
39

[இதுவுமது.]

(பத.) கொடுவரி- புலியானது, பாய- பாய்தலினாலே, துணை இழந்து- தனது துணையாகிய பிடியினைப் பறிகொடுத்து, அஞ்சி- அச்சமிகுந்து (அப்பாற் சென்று) கடு- மாவிலங்கு மரம், உணங்கு- வாடி நிற்கும், பாறை- பாறைகளுக்கு இடையேயுள்ள, கடவு- வழியினிடத்தே, தெவுட்டு-நிறைத்து நிற்கும்படியான, கோண்மா- களிறானது, படு பகை- (தனது துணையினைப்) படுத்த

புலியாகிய புகையின் வரவினை, பார்க்கும்- எதிர்பார்த்திருக்கும்படியான, சுரம்- பாலை நிலத்தின்கண்ணுள்ள, நெடு வரை- நீண்ட மலைத் தொடர்களையுடைய, அத்தம்- அருநெறிக்கண்ணே, இறப்பர் கொல்- (காதலர்) கடந்து செல்வாரோ? (என்று தலைமகள் ஐயுற்றுத் தோழியிடங் கூறினாள்.)

(விரி.) கொல்- ஐயப் பொருள் கொண்டது. படுபகை- வினைத்தொகை. (39)

மன்ற முதுமரத் தாந்தை குரலியம்பக்
குன்றக நண்ணிக் குறும்பிறந்து- சென்றவர்
கள்ளிய தன்மையர் போலு மடுத்தடுத்
தொள்ளிய தும்மல் வரும்.
40

[தலைமகனின் வருகையினை எதிர்நோக்கிக் கலங்கியதலைமகட்குத் தோழி நிமித்தங் காட்டிக்

கூறியது]

(பத.) குன்று அகம்- மலையிடத்தினை, நண்ணி- நெருங்கிச் சென்று, குறும்பு இறந்து- பாலைநிலத்தூர் பலவற்றைக் கடந்து, சென்றவர்-(பொருள்வயிற்) பிரிந்த நந்தலைவர்,

மன்ற- மன்றின் கண்ணுள்ள, முதுமரத்து- ஆலமரத்தில் வாழும், ஆந்தை- ஆந்தையானது, குரல் இயம்ப- ஒலிக்க, அடுத்து அடுத்து- அடிக்கடி, ஒள்ளிய- நலமிகுந்த, தும்மல்- தும்மலானது, வரும்- (நம்மிடத்துத்) தோன்றாநின்றதாதலின், கள்ளிய தன்மையர் போலும்- களவின் கண் நம்மாட்டு அவர் கொண்ட கடுங்காதல் போன்று இஞ்ஞான்றுங் கொண்டு மீள்வர்போற் காண்கின்றது (என்ற தோழி தலைமகளிடங் கூறினாள்.)

(விரி.) சென்றவர் , ஆந்தை இயம்ப, தும்மல் வருதலின், கள்ளிய தன்மையர் போலும் என முடிக்க. "ஒள்ளிய தும்மல்" என்றமையின் நன்னிமித்தம் எனலாயிற்று. அடுத்து

அடுத்து- அடுக்குத் தொடர்: மிகுதிப்பொருள் பற்றியது.

பூங்கணிட மாடுங் கனவுந் திருந்தின
வோங்கிய குன்ற மிறந்தாரை யாநினைப்ப
வீங்கிய மென்றோள் கவினிப் பிணிதீரப்
பாங்கத்துப் பல்லி படும்.

[இதுவுமது]

(40)

41

(பத.) ஓங்கிய- வானாளாவிய, குன்றம்- குன்றுகளாகிய பாலை நில வழியே, இறந்தாரை- கடந்து சென்ற நங்காதலரை, யாம் நினைப்ப- நாம் நினைத்த வளவிலே, பூம் கண்- நம் அழகிய

கண்களிலே, இடம் ஆடும்- இடக்கண்ணானது துடித்தாடாநின்றது, கனவும்- நாம் காண்கின்ற கனவுகளும், திருந்தின- நற்பொரு ளுடையனவாயுள்ளன, வீங்கிய- அவற்றால் பூரித்த, மெல் தோள்- நம் மெல்லிய தோள்கள், கவினி- அழகுற்று, பிணிதீர- நோய் நீங்கும் வண்ணம், பல்லி- பல்லியானது, பாங்கு- இணக்கமாக, படும்.- நிமித்தஞ் சொல்லாநின்றது (என்று தோழி தலைமகளிடங் கூறினாள்.)

(விரி.) பெண்மக்களுக்கு இடக்கண்ணாடல் நன்னிமித்தம் என்பது பழைய நூல்வழக்கு. அத்து- சாரியை. (41)

ஒல்லோமென் றேங்கி யுயங்கி யிருப்பாளோ
கல்லிவ ரத்த மரிபெய் சிலம்பொலிப்பக்
கொல்களி றன்னான்பின் செல்லுங்கொ
லென்பேதை

மெல்விரல் சேப்ப நடந்து.
42

[உடன்போய தலைமகட்கு நற்றாய் கவன்றுறைத்தது.]

(பத.) என் பேதை - என்மகள், கொல்களிறு அன்னான்- கொல்கின்ற ஆண்யானையை யொத்தவனாகிய தலைமகனின், பின்- பின்னாக, அரி- சிறுகற்கள், பெய்- பெய்யப் பெற்றுள்ள, சிலம்பு- காற்சிலம்புகள், ஒலிப்ப- ஓசையிடவும், மெல்விரல்- மெல்லிய கால்விரல்கள், சேப்ப- சிவக்கும்படியாகவும், கல்- கற்கள், இவர்- மேலெழுந்து நிற்கும்படியான, அத்தம் - பாலை நிலவழியே, நடந்து- நடத்தலைச் செய்து, செல்லும் கொல் - செல்வாளோ? (அன்றி), ஒல்லோம் என்று- (இப்பாலை நிலவழியே) செல்லுதல் நம்மால்

முடியாத காரியமென்று நினைத்து, ஏங்கி- வருந்தி, உயங்கி- வாடி, இருப்பாளோ- துன்புற்றுத் தாங்குவளோ? (யாதோ அறியேன் என்று, நற்றாய் தனக்குட்டானே கூறிவருந்தினள்.)

(விரி.) அரி- சிலம்பினுட் பெய்யும் சிறு கற்கள். உடன் போதல் - தலைவனுடன் பாலை நிலவழியாகப் புறப்பட்டுப் போதல். (42)

பாலை முற்றும்.

நான்காவது – மருதம்

ஆற்ற லுடைய னரும்பொறி நல்லூரன்
மேற்றுச் சிறுதாய காய்வஞ்சி - போற்றுருவிக்
கட்டக முத்திற் புதல்வனை மார்பின்மேற்
பட்டஞ் சிதைப்ப வரும்.
43

[மகற்பெற்ற தலைமகளினைச் செய்பெருஞ் சிறப்பொடுசேர்தற்கண் தலைமகன் மகற்கண்டு மகிழ்ந்த வகையினைத் தோழி கண்டு மகிழ்ந்து கூறியது.]

(பத.) ஆற்றல்- போர்வன்மையினை, உடையன்- கொண்ட வனாகிய, அரும் பொறி - அரிய செல்வத்தினையுடைய, நல் ஊரன்- நல்ல மருதநிலத்தூர்த் தலைவன்,மேற்று- மேற்பாகத்தினிடத்தே, சிறு காய்- சிறிய காயானது, தாய- பொருந்தியுள்ள, வஞ்சிபோல்- வஞ்சிச் செடியினைப் போன்று, கண் தக- கணுக்கள் சிதறுதலால் (தோன்றும்படியான), முத்தின்- முத்தினைப் போன்ற, புதல்வனை- தன் மகனை,

மார்பின் மேல்- மார்பின்மீதே, துருவி-

நெருக்கித் தழுவிப் பிடித்து, பட்டம்- மேலாடை, சிதைப்ப- சிதையும்படியாக, வரும்- (செய்பெருஞ் சிறப்பின்கண்ணே) காணப்பெறுகின்றனன் (என்று தோழி கூறி மகிழ்ந்தாள்.)

(விரி.) தலைமகள் பெற்றெடுத்த மகற்கு ஐம்படைபூட்டிப் பெயரிடுதலாகிய சிறப்பின்கண் தலைமகன் புதல்வனை மேற்கொண்டு வந்தமையினைக் கண்டு மகிழ்ந்த தோழி கூறியதாகு மிச்செய்யுள். இது, "கரணத்தினமைந்து முடிந்த காலை," (தொல்.பொருள். கற்பு.5) என்ற சூத்திரத்தின் கண், "புதல்வற் பயந்த புனிறு சேர் பொழுதின்........செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்," என்பதனாற் பெறப்படும். செய்பெருஞ் சிறப்பு- பிறந்த புதல்வன் முகங்காண்டல், ஐம்படை பூட்டல், பெயரிடுதன் முதலியன. ஐம்படை- திருமாலின் ஐவகைப்படை

அகன்பணை யூரனைத் தாமம் பிணித்த
திகன்மை கருதி யிருப்பன் - முகனமரா
வேதின் மகளிரை நோவ தெவன்கொலோ
பேதமை கண்டொழுகு வார்.

போன்றமைந்த கழுத்தணி கலம். (43)

44

[பரத்தையிற் பிரிந்த தலைமகனைத் தலைமகள் காய்ந்து கூறியது.]

(பத.) அகன் பணை- பரந்த மருதநிலத்துள்ள, ஊரனை- ஊர்க்குத் தலைவனான என் காதலனை, தாமம்- மலர்மாலையினாலே, பிணித்தது- (பரத்தையர்) கட்டிக் கொண்டு போயதனால், இகன்மை - (அவர் மாட்டு) மாறுபாட்டினை, கருதி-எண்ணி, இருப்பன்- இருத்தலைச் செய்கின்றனன், பேதமை- அறியாமையினை, கண்டு ஒழுகுவார்- செய்து நடப்பவராகிய, ஏதில் மகளிரை -

பிறமகளிராகிய பரத்தையரை, முகன் அமரா-
மனம் பொருந்தி, நோவது- (தலைமகன்
பிரிவுக்காக) நொந்து கொள்வது, எவன்-
எற்றுக்கு? (அன்பும் உறவுமுடைய தலைமகனை
நோவதே நெறியாம், என்று தலைமகள்
கூறிக்கொண்டனள்.)

(விரி.) பரத்தையர் தலைமகனைப்
பொழிலாட்டு முதலியவற்றுட் படுத்தி
அழைத்துச் சென்றமையினைத் தெரிந்த
தலைமகள் முதற்கண் அப்பரத்தையரை
வெறுத்துப் பின்னர், பிறராகிய அவரை
வெறுத்தல் நெறியன்று எனத் தெளிந்து,
தலைமகனைக்
காய்ந்து (புலந்து) கூறியதாகு மிச்செய்யுள்.
கொல், ஓ – அசை நிலைகள். (44)

37

போத்தில் கழுத்திற் புதல்வ னுணச்சான்றான்

மூத்தே மினியாம் வருமுலையார் சேரியு
ணீத்துநீ ரூனவாய்ப் பாண!நீ போய்மொழி
கூத்தாடி யுண்ணினு முண்.
45

[பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது.]

(பத.) பாண- பாணனே! கழுத்தில்- (தலைமகன் முன்பு தழுவியமைந்த) எமது கழுத்தினிடத்தே, போத்து இல்- இனித் தழுவுதற்கு நேரமின்றி, புதல்வன் - என் மகன், உண - முலையுண்ணும்படி, சான்றான் - அமைந்துள்ளான், இனி- மேலும், யாம்- நாம், மூத்தேம் - தலைமகற்குத் தகுதியின்றி மூப்பினையடைந்தோம், (ஆகலின்) நீ நீத்து - நீ இவ்விடத்தினின்று நீங்கி, வரு முலையார் - முன்னோக்கி வளருகின்ற முலைகளையுடைய பரத்தையரது, சேரியுள் - சேரியினிடத்தே, போய் - சென்று, மொழி - (அங்குள்ள தலைமகனுக்கு எமது மூப்பு முதலிய

செய்திகளை) இயம்புவாயாக, (அன்றி) நீர் - கள் முதலிய குடிநீர் வகைகளையும், ஊன் - இறைச்சிகளையும், அவாய் - விரும்பி, கூத்து ஆடி- பரத்தையர் முன்பாக நாடக முதலியனவற்றை நடத்தி, உண்ணினும் - உண்ணுதலைச் செய்யினும், உண் - செய் (என்று தலைமகள் பாணனிடங் கூறினாள்.)

(விரி.) போது = போத்து = பொழுது; விரித்தல் விகாரம். தொகை. (45)

உழலை முருக்கிய செந்நோக் கெருமை
பழனம் படிந்துசெய் மாந்தி - நிழல்வதியுந்
தண்டுறை யூரன் மலரன்ன மாற்புறப்
பெண்டிர்க் குரைபாண! உய்த்து.

[இதுவு மது]

வருமுலை- வினைத்

(பத.) பாண- பாணனே! உழலை - உழலை மரத்தினை, முருக்கிய - நாசப்படுத்திய, செந்நோக்கு - சிவந்த கண்களையுடைய, எருமை - எருமையானது, பழனம் படிந்து - மருத நிலத் தூடே தவழ்ந்து சென்று, செய் - கழனியிலே, மாந்தி - மேய்ந்து, நிழல்- (மருதமர) நிழலின் கண்ணே, வதியும் - தங்கியிருக்கும்படியான, தண் - குளிர்ந்த, துறை - இடத்தினையுடைய, ஊரன் - ஊர்க்குத் தலைவனாகிய தலைமகனது, மலர் அன்ன -

(வண்டுகள் பல படியும் வண்ணம் மலர்ந்து கிடக்கும்) மலர்போன்ற, மால் - காதலினை, உய்த்து - கொண்டு சேர்த்து. புற பெண்டிர்க்கு -

ஊர்க்குப் புறத்தேயுள்ள சேரியில் வாழும் பரத்தையர்க்கு, உரை - சொல்வாயாக (என்று தலைமகள் பாணனிடங் கூறினாள்.)

(விரி.) "மலரன்ன மார்புற," எனவும் பாடம். தலைமகன் காதல் பரத்தையர் பலருக்கும் உரியதன்றித் தனக்குரியதன்று என்பாள், "மலரன்ன மால்," எனலாயினள். உழலை மரம்-தொண்டுக் கட்டை: அன்றி, தொழுவ மரமெனலுமாம். (46)

தேங்கமழ் பொய்கை யகவய லூரனைப்
பூங்கட் புதல்வன் மிதித்துழக்க - வீங்குத்
தளர்முலை பாராட்டி யென்னுடைய பாவை
வளர்முலைக் கண்ணுமுக்கு வார்.
47

[தலைமகளின் இல்லற வியல்பினைக் கண்டு மகிழ்ந்த செவிலி நற்றாய்க் குரைத்தது]

(பத.) தேம் கமழ் - நறுமண மிக்க, பொய்கை - மலர்த் தடங்களையுடைய, அகம் - மருத நிலத்தே யுள்ள, வயல் ஊரனை - கழனி சூழ்ந்த ஊர்க்குத் தலைவனாகிய தலைமகனை, பூம் கண் - அழகிய கண்களையுடைய, புதல்வன் - மகன், மிதித்து - கால்களால் துவைத்து, உழக்க - சிதைத்துக் கொண்டிருக்க, (தலைமகனார்,) ஈங்கு- இந் நிலையிலே, என்னுடைய பாவை- என் பாவை போல்பவளாகிய தலைமகளின், தளர்முலை- (மகப் பெற்றமையால்) நெகிழ்ந்துள்ள முலைகளை, பாராட்டி- விரும்பி, வளர் முலை கண்- முன்னோக்கி வளர்ந்து காணும்படியான அம் முலைகளின் நுனியினை, ஞமுக்குவர்- கைகளால் நெருடி மகிழ்ச்சி யுறுவார் (என்று செவிலி நற்றாயிடங் கூறினாள்)

(விரி) அகம்- மருதம். பாவை- உவமையாகுபெயர் ஞமுக்குதல்-நமுக்குதல் - நெருடுதல்; ஞகர நகரப் போலி;

நமை-முதனிலை. தளர்முலை, வளர்முலை-வினைத் தொகைகள்,.

தலைமகளின் இல்வாழ்க்கைச் சிறப்பினை நேரிற் கண்ட செவிலி நற்றாய்க்குக் கூறியதாகு மிச் செய்யுள். (47)

பேதை புகலை புதல்வன் றுணைச்சான்றோ

னோதை மலிமகிழ்நற் கியாஅ மெவன்செய்தும்
பூவார் குழற்கூந்தற் பொன்னன்னார் சேரியு
ளோவாது செல்பாண! நீ.

[தலைமகள் பாணர்க்கு வாயின் மறுத்தது]

(பத) பாண- பாணனே! ஓதை -பல்வகை யொலிகள்,

48

மலி-மிகுந்த, மகிழ்நற்கு-

மருதநிலத் தலைவனாகிய தலைமகனுக்கு,

புதல்வன்- மகனையே, துணை சான்றோன்- (பிரிவின் கண்) துணைவனாகிய சான்றோனெனும், புகல்- அடைக்கலமாகக் கொண்ட, பேதை- பெண்பாலாகிய, யாம்- நாம், எவன் செய்தும்- என் செய்து பயன்படப் போகின்றோம்? (அவற்கு எம்மால் ஆவது யாதுமின்று) பூ ஆர் -பூக்கள் நிறைந்த, குழல் கூந்தல்- சுருட்டி முடித்த மயிரினையுடைய, பொன் அன்னார்- திருமகளை யொத்தவராகிய (அவற்கு வேண்டிய) பரத்தையரின், சேரியுள்- சேரியினிடத்தே, ஓவாது- ஒழியாது, நீ செல்- நீ போவாயாக (என்று தலைமகள் பாணனிடங் கூறினாள்)

(விரி.) புகலை-'ஐ,' சாரியை.மகிழ்நன்-மருதநிலத்தலைவன். எவன்-அஃறிணை வினாவினைக் குறிப்புமுற்று.மகிழ்நற்கியா அம்- குற்றிலிகரம் அலகு பெற்றிலது; இசைநிறையளபெடை கொண்டிளது. பரத்தையரைப் பொன்னன்னார்

என்றது இழித்தலோடு கூடிய குறிப்பு மொழியாம். (48)

யாணர்நல் லூரன் றிறங்கிளப்ப லென்னுடைய
பாண! இருக்க வதுகளை-நாணுடையான்
றன்னுற்ற வெல்லா மிருக்க விரும்பாண!
நின்னுற்ற துண்டே லுரை.
49

[இதுவுமது]

(பத.) என்னுடைய பாண-என்னருமைப் பாணனே! இருக்க-இவ்விடத்தே இருப்பாயாக, யாணர்-புது வருவாயினையுடைய, நல் ஊரன்-நல்ல மருதநிலத்தூர்த் தலைவனது, திறம்-மேன்மையினை, கிளப்பல்-(பலபடியாக எடுத்துச்) சொல்லுதலாகிய, அது-அப்போக்கினை, களை-ஒழித்து விடுவாயாக, இரும் பாண- பெருமைமிக்க பாணனே! நாண் உடையான்(பிற பெண்டிரைக்

காணுதலில்) வெட்கமுற்றுப் பின்வாங்கும் பெருமையினையுடைய தலைமகனுக்கு, உற்ற எல்லாம்- நேர்ந்த குறைகளெல்லாம், இருக்க- இருக்கட்டும், நீன்-உனது வாழ்க்கையில், உற்றது-

40

பொருந்திய குறை யாதேனும், உண்டேல்-உளதாயின், உரை-எடுத்துச் சொல்வாயாக (என்று தலைமகள் பாணனிடங் கூறினாள்.)

(விரி.) "நாணுடையான்," என்றது இழித்தல் கருதிய குறிப்பு மொழி. கிளப்பல்- கிளத்தல்' சொல்லல். (49)

ஒள்ளிதழ்த் தாமரைப் போதுறழு மூரனை
யுள்ளங்கொண் டுள்ளானென்

றியார்க்குரைக்கோ   வொள்ளிழாய்! அச்சுப்
பணிமொழி யுண்டேனோ மேனாளோர்
பொய்ச்சூ ளெனவறியா தேன்.
50

[தலைமகன் பரத்தையிற் பிரியத் தலைமகள் புலந்து சொல்லியது.]

(பத.) ஒள் இழாய் - ஒளியினையுடைய அணிக***யணிந்த தோழியே! மேல் நாள் - (களவுப் புணர்ச்சி நிகழ்ந்த) அக்காலத்திலே (கூறிய உறுதி மொழிகள்,) ஓர் பொய் சூள் - பலரும் நினைவிலிருத்தக் கூடிய வஞ்சக மொழிகள், என-என்று, அறியாதேன்.- தெரிந்து கொள்ள முடியாத யான், பணிமொழி - அக்காலத்தே (தலைமகன்) பணிவுடன் கூறிய அவ்வுறுதி மொழிகளை, அச்சு - எழுத்து வடிவமாக, உண்டேனோ - (எழுதித்தரப் பெற்றுக்) கொண்டேனுமில்லை, (அங்ஙனமிருக்க, இப்பொழுது) ஒள் இதழ்-

நிறமிக்க இதழ்களையுடைய, தாமரை போது - தாமரைப்பூக்கள், உறழும் - இடையிட்டுக் கிடக்கும், ஊரனை - ஊர்க்குத் தலைவனாகிய தலைமகனைப்பற்றி, உள்ளங் கொண்டு - மனமுழுவதையு மொன்று சேர்த்து, உள்ளான் - (என்னை) எண்ணுவதில்லை, என்று - என்பதாக, யார்க்கு - எவரிடத்தில், உரைக்கோ - (குறை) கூறிக்கொள்ளட்டும் (என்று தலைமகள் தோழியை வினவினள்.)

(விரி.) உரைக்கு - தன்மை யொருமை வினைமுற்று. ஓ- இரக்கப்பொருள் கருதியது. ஓர் - நினைவு; முதனிலைத் தொழிற்பெயர். உண்டேனோ - ஓ எதிர் மறைப் பொருளது. புலத்தல்- ஊடல். என்றியார்க்கு - குற்றியலிகரம் அலகு பெற்றிலது. (50)

பேதைய ரென்று தமரைச் செறுபவோர்
போதுறழ் தாமரைக்கண் ணூரனை நேர்நோக்கி

வாய்மூடி யிட்டு மிருப்பவேர் மாணிழாய்!
நோவதென் மார்பறியு மின்று.
51

[இதுவு மது]

(பத) ஏர்- அழகிய, மாண்- மாட்சிமைப்பட்ட, இழாய்- அணிகலன்களை யணிந்த தோழியே! தமரை- தம்மவராகிய தலை மகனாரைக் (காணாவிடத்து அவராற் காதலிக்கப்படும் பரத்தையர்) பேதையர் என்று -அறிவிலாரென்று திட்டி, செறுப- சினத்தை மேற்கொள்வர், ஓர்- ஒப்பற்ற, தாமரை போது- தாமரைப் பூக்கள், உறழ்- இடையிட்டுக் கிடக்கும்படியான, கண்- இடத்தினையுடைய, ஊரனை- மருத நிலத்தூர்த் தலைவனாகிய தலைமகனை, நேர்நோக்கி- எதிரே பார்த்தவளவில், வாய் மூடி யிட்டும்- அடங்கியும், இருப்ப- இருப்பார்கள், (அங்ஙனம்

வஞ்சகர்களாகிய அவர்களை நாடித் தலைமகனார் பிரிந்து சென்றது) இன்று- இப் பொழுது, நோவது- மிகுதியும் மன நோயினைச் செய்யாநின்றது, (அந்நோயின் கொடுமை வாய்விட்டுக் கூறுந்தரத்ததன்று) என் மார்பு- என்னெஞ்சமே, அறியும்- (அதனைத்) தெரியுந் தரத்தது (என்று தலைமகள் தோழியடங் கூறினாள்)

(விரி) செறுப, இருப்ப- பலர்பால் படர்க்கை வினைமுற்றுக்கள். மாணிழை- பண்புத்தொகையன்மொழி. (51)

காதலிற் றீரக் கழிய முயங்கன்மி
னோதந் துவன்று மொலிபுன லூரனைப்
பேதைப்பட் டேங்கன்மி னீயிரு மெண்ணிலா
வாசை யொழிய வுரைத்து.
52

[பரத்தையரும் ஏனைத்தலைவியரும் தம்முறுவிழுமம் கூறிய பொழுது தலைமகள் அவர்கண்மாட்டுப் பரிந்து கூறியது]

(பத) நீயிரும்- யானே யன்றி நீங்களும், ஓதம்- வெள்ளமானது, துவன்றும்- நெருங்கி மிகுதலாலுண்டாகிய, ஒலி- ஒலிக்கின்ற, புனல் ஊரனை- நீர்வளமிக்க மருதநிலத் தலைவனாகிய நம் தலை மகனை, காதலின்- உள்ளன்பின் மிகுதியினின்று, தீர- முழுவதும், கழிய- நீங்கும்படியாக, முயங்கன்மின்- இனித் தழுவாதிருப்பீர்களாக, பேதைபட்டு- அறியாமையாலே அகப்பட்டு, எண் இலா- அளவில்லாத, ஆசை- தலைமகனது, விருப்பம், ஒழிய- நீங்கும்படி உரைத்து- (காதன் மொழிகள் பல) கூறி, ஏங்கன்மின்- (தலைமகன்மாட்டுக்) குறையிரக்கா திருப்பீர்களாக. (இங்ஙனம் சில காலம் நாம் ஒற்றுமையாக இருப்போமாயின், தலைமகன் முன்போல் நம்மாட்டுக்

காதல் கொண்டு ஒழுகுவன், என்று தலைமகன் தன் மாட்டு வந்து, தலைமகனின் அன்பின்மையினை எடுத்துச் சொன்ன பரத்தையரிடத்தும், ஏனைத் தலைவியரிடத்தும் கூறினாள்)

(விரி) தம்முறு விழுமம்- தாமுற்ற துன்பம். தலைமகன் தன் வினைமிகுதியாற் சிற்றின்பங் கருதானாக, அக்காலத்துப் பரத்தையர் முதலோர் தலைமகள்மாட்டு முறையிட்டுக் கொள்ளத் தலைமகள் கூறியதாகுமிச்; செய்யுள். இதனை "தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்" (தொல். பொருள். பொருளிய. 41) என்றதனாற் கொள்க. நீயிரும்- உம்மை எச்சப் பொருளது. ஏங்கன்மின், முயங்கன்மின்- எதிர்மறை ஏவற் பன்மை வினைமுற்றுக்கள். (52)

உண்ணாட்டஞ் சான்றவர் தந்த நசையிற்றென்
றெண்ணார்க்குக் கண்ணோட்டந்
தீர்க்குதுமென்-றெண்ணி வழிபாடு கொள்ளும்
வளவய லூரன்
பழிபாடு நின்மே லது.
53

[தோழி, தலைமகளின் ஊடல் தீர்த்தலை விரும்பிய தலைவன் வயத்தளாய் நின்று தலைவியைக் கழறியது]

(பத) உள் நாட்டம்- ஆழ்ந்த ஆராய்ச்சி முறைகள், சான்றவர்- நிறைந்த பெரியோர்கள் தந்த- ஏற்படுத்தியது (இல்லறம்,) நசையிற்று- அன்போடு கூடியது, என்று எண்ணார்க்கு- என நினையாது கலவியொன்றினையே கருதும் பரத்தையரிடத்தில், (காட்டிய) கண்ணோட்ம்- அருளினை, தீர்க்குதும்- இனி விட்டொழிப்போம், என்று எண்ணி- எனக் கருதி,

வழிபாடுகொள்ளும்- நின்பால் வணக்கத்தினை மேற்கொண்டுள்ள, வள வயல்- வளப்ப மிக்க கழனிகள் சூழ்ந்துள்ள, ஊரான்- ஊர்க்குத் தலைவனாகிய தலைமகனது, பழிபாடு- (நீ அவனை ஏற்றுக்
கொள்ளாமையாலுண்டாங்) குற்றப்பாடு, நின் மேலது- நின்னையே சாரும். (ஆகலின், அவனை ஏற்றுக் கொள்வாயாக, என்று தோழி தலை மகளிடங் கூறினாள்)

(விரி) கழறுதல்- வற்புறுத்திக் கூறல். எண்ணார்க்கு-உருபு மயக்கம். நசையிற்று, மேலது- ஒன்றன்பாற் குறிப்பு வினை முற்றுக்கள். தந்த- தந்தது. ஈறுகெட்ட ஒன்றன்பால் வினைமுற்று. (53)

உண்டுறைப் பொய்கை வராஅ லினமிரியுந்
தண்டுறை யூர! தகுவதோ- வொண்டொடியைப்

பாராய் மனைதுறந் தச்சேரிச் செல்வதனை
யூராண்மை யாக்கிக் கொளல்.
54

[பரத்தையர்பாற் சென்று வந்த தலைமகனைத் தோழி வணங்கிய மொழியான் இணங்குவித்தது]

(பத) பொய்கை- தடாகத்தினிடத்தே, உண்டு- மேய்ந்து, உறை- வாழும், வரால் இனம்- வரால்மீன் கூட்டம், இரியும்- திரியும்படியான, தண்- குளிர்ந்த, துறை- இடத்தினையுடைய, ஊர- மருதநிலத்திற் குரிய தலைவனே! ஒண் தொடியை- ஒள்ளிய வளையினை யணிந்த தலைமகளை, பாராய்- கடைக்கணிக்காதவனாய், மனை துறந்து- எமது மனையினைவிட்டு நீங்கி, அ சேரி- அப்பரத்தைர் சேர்ந்து வசிக்கும் சிற்றூர்க்கு, செல்வதனை- போகின்ற போக்கினை, ஊர் ஆண்மை- பெரிய காரியமாக, ஆக்கி கொளல்-

ஏற்படுத்திக் கொள்வது, தகுவதோ-
(பெருந்தன்மை மிக்க நினக்குத்) தக்கதாமோ?
(என்று தோழி தலைமகனை வினவினள்)

(விரி.) வரா அல் - இசைநிறை யளபெடை.
பாராய் - முற்றெச்சம். ஒண்டொடி -
பண்புத்தொகை யன்மொழி. (54)

பொய்கைநல் லூரன் றிறங்கிளத்த
லென்னுடைய
வெவ்வ மெனினு மெழுந்தீக - வைகன்
மறுவில் பொலந்தொடி வீசு மலற்றுஞ்
சிறுவ னுடையேன் றுணை.
55

[பாணற்கு வாயின் மறுத்தது.]

(பத.) (பாணனே!) வைகல் - நாடோறும், மறு
இல் - குற்றமில்லாத, பொலம் தொடு -

பொன்னாற் செய்த வளையணிந்த கைகளை, வீசும் - வீசியும், அலற்றும் - விரித்தும் விளையாடும். சிறுவன் - என் புதல்வனாகிய சிறுவனை, துணை - பாது காவலாக, உடையேன் - கொண்டுளேன், (ஆகலின்) பொய்கை - நல்ல நீர் நிலைகளையுடைய, நல் ஊரன் - நல்ல மருத நிலத் தலைவனாகிய தலைமகனின், திறம் - ஒழுக்க முறைகளை, கிளத்தல் - எடுத்தியம்ப வேண்டா, என்னுடைய எவ்வம் எனினும் -

(தலைமகன் பிரிய நேரிட்டது) எனது தவறேயாயினும், (ஆகட்டும்,) எழுந்தீக -(இவ் விடத்தை விட்டு) எழுந்து நடப்பாயாக (என்று தலைமகள் பாணனிடங் கூறினாள்.)

(விரி.)கிளத்தல் - எதிர்மறை வியங்கோள். எழுந்தீக - வியங்கோள் வினைமுற்று. தொடி -

தானி யாகுபெயர். அன்றி, 'பொலந்தொடி'எனத் தொடுத்து மொழிந்து பண்புத்தொகை யன்மொழியாக்கினுமாம். (55)

வளவய லூரன் மருளுரைக்கு மாதர்
வளைஇய சக்கரத் தாழி - கொளைபிழையா
வென்றிடை யிட்டு வருமேனின் வாழ்நாட்க
ளொன்றி யனைத்து முளேன்.
56

[பரத்தையிற் பிரிந்த தலைமகனின் வரவினை வேட்டுத் தோழி தலைமகட்குக் கூறியது.]

(பத.) (எம்பெருமாட்டீ!) வளம் வயல்- பல்விதவளத்தாற் சிறந்த வயல்களாற் சூழப்பட்ட, ஊரன்- மருத நிலத்தூர்த் தலைவனாகிய தலைமகன், மருள் உரைக்கும்- மாயமொழிகளைக் கூறி மயக்கும், மாதர் -பரத்தையரது, வளைஇய-வளைந்த, சக்கரத்து

ஆழி- சக்கரம் போன்ற மோதிரமணிந்த கைகளால், கொளை- கொள்ளப்படுதலினின்றும்,. பிழையா- தப்பி, என்று என்றைக்காவது, இடை இட்டு - நடுவிலே தோன்றி, வருமேல் - நம்மிடத்து வருவானாயின், நின் - உன்னுடைய, வாழ் நாட்கள் - வாழுங் காலத்திலே; ஒன்றி- அவனைச் சாருவித்து, அனைத்தும் – வேண்டிய வெல்லாம், உளேன் - பெற்றவள்போல மகிழ்வேன் (என்று தோழி தலைமகளிடங் கூறினாள்.)

(விரி.) வளைஇய - சொல்லிசையளபெடை. கொளை- கொள்ளை: இடைக்குறை விகாரம். பிழையா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஆழி - தானியாகு பெயர். (56)

மருதம் முற்றும்.

ஐந்தாவது – நெய்தல்

ஒழுகு திரைக்கரை வான்குருகின் றூவி
யுழிதரு மூதை யெடுக்குந் துறைவனைப்
பேதையா னென்றுணரு நெஞ்சு மினிதுண்மை
யூதிய மன்றோ வுயிர்க்கு.
57

[தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.]

(பத.) (தோழியே!) ஒழுகு - (ஏறிவந்து பாய்ந்து) இறங்கிச் செல்லும்படியான, திரை - அலைகளையுடைய, கரை - கடற்கரையினிடத்தே (வாழும்படியான) வான் - பெரிய, குருகின் - கடற்பறவைகளின், தூவி - இறகுகளினின்றும், உழிதரும் - சுழன்று வெளிப்படும், ஊதை - காற்றானது, எடுக்கம் - எடுப்பாக வீசும்படியான, துறைவனை -

துறைமுகத்துக்குரிய தலைவனாகிய தலைமகனை, பேதையான் - (வஞ்சகமின்றி) அறியாமை யொன்றனையே யுடையான், என்று - என, உணரும் - தெரியும்படியான, நெஞ்சும் - மனத்தையும், இனிது உண்மை - நன்றாக நாம் கொண்டிருத்தல்,

உயிர்க்கு - நம் வாழ்க்கைக்கு, ஊதியம் அன்றோ – நன்மை யுண்டாக்கும் நற்போக் கன்றோ? (என்று தலைமகள் தோழியை வினவினள்.)

(விரி.) நெஞ்சும் - உம்மை உயர்வு சிறப்புப் பொருள். அன்று, ஓ - தேற்றப் பொருள் தரு மிடைச் சொற்கள். பகற்குறிக்கண் பன்முறை வரைவு கடாவிச் சென்ற தோழி, ஒரு நாள் தம்மைச் சிறைப்புறமாக நின்று நோக்கும் தலைவனுக்குக் கேட்கும்படியாகத்

தலைமகளிடத்து, "தலைமகன் பெரிதும் பேதமையுடையான்," என இயற்பழித்தனள். அதனைக் கேட்ட தலைமகன் அதற்கு

மறுமொழியாகக் கூறியதாகு மிது. "தலைமகன் நம்மை ஏமாற்றும் வஞ்சகனாகாது பேதையானாயது பெரிதும் கொண்டாடற் பாலதாம்," என்பது தலைமகளின் கருத்து.
இயற்பழித்தல் - குறை கூறல்.
இயற்பட மொழிதல் - நிறைவு கூறல். (57)

என்னைகொ றோழி! அவர்கண்ணு நன்கில்லை
யன்னை முகனு மதுவாகும் - பொன்னலர்
புன்னையம் பூங்கானற் சேர்ப்பனைத் தக்கதோ
நின்னல்ல தில்லென் றுரை.
58

[வரையா தொழுகுந் தலைமகன் ஒருஞான்று தோழியைக்கதுமென எதிர்ப்படத் தலைமகள் தன்னிலையினைத் தலைமகற்குக் கூறெனத் தோழிக்குச் சொல்லியது.]

(பத.) தோழி - தோழியே! என்னை கொல் - யாது காரணம்? அவர்கண்ணும் - நம்தலைமகனார் மாட்டும், நன்கு இல்லை - விரைந்து வரைதலை மேற்கொள்ளுமாறு காணப்பட்டிலது, அன்னை முகனும் - செவிலி நம்மாட்டு நடந்துகொள்ளும் மனப்போக்கும் (களவு வெளிப் பட்டமையினாலே,) அதுவாகும் - அம்முறையிற் கொடுமையினைக் கொண்டுள்ளது, பொன் அலர் - அழகிய மலர்களையுடைய, புன்னை - புன்னை மரங்கள் நிரம்பிய, பூம் கானல் - அழகிய கடற்கரைச் சோலைகளையுடைய, சேர்ப்பனை - துறைமுகத்துக்குரிய தலைவனாகிய தலை மகனுக்கு, தக்கதோ - (இம்முறையாக வரைவு நீட்டித்தல்) பொருத்தமாகுமோ? (பொருந்தாது, ஆகலின்,) நின் அல்லது - நின்னை யல்லாமல் வேறு துணை (எனக்கு), இல் என்று - இல்லையென்று, உரை - (தலைமகனுக்குச்) சொல்வாயாக (என்று தலைமகள் தோழியிடங் கூறினாள்.)

(விரி.) கொல் - ஐயப் பொருள் தரு மிடைச்சொல். அவர் கண்ணும் என்பதனால் தலைமகளின் பெற்றோர்மாட்டும் எனக்கொள்க. செவிலி மனப்போக்கு - காவலிற் கடுகுதல். சேர்ப்பனை - சேர்ப்பனுக்கு: உருபுமயக்கம். தக்கதோ: ஓ, எதிர்மறைப்பொருள். (58)

இடுமண லெக்க ரகன்கானற் சேர்ப்பன்
கடுமான் மணியரவ மென்று - கொடுங்குழை
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தாள் சிறுகுடிய
ருள்ளரவ நாணுவ ரென்று.

கதுமென - திடீரென்று.

59

[இரவுக்குறி வேண்டிவந்த தலைமகன் தலைமகளைக் காணாது சிறைப்புறத்தானாக, தோழி தலைமகள் அல்லகுறிப்பட்டமையினைத் தலைமகற்குக் கூறியது.]

(பத.) கொடும் குழை - வளைந்த காதணிகளையுடைய தலை மகன், புள் அரவம் - பறவைகளின் ஒலிகளை, கேட்டு - அறிந்து இடு - (அலைகளாலும் காற்றினாலும்) இடப்பட்ட, மணல் எக்கர் - மணல் மேடுகளையுடைய, அகன் கானல் - இருப்பிடமாகிய கடற்கரைச் சோலைகளையுடைய, சேர்ப்பன் - துறைமுகத்திற்குரிய தலை மகனது, கடு மான் - விரைந்து செல்லுங் குதிரையின் (கழுத்தி லணியப்பெற்ற), மணி - மணிகளின், அரவம் என்று - ஒலி யென்று (நினைத்து), - சிறுகுடியர் - தன் சுற்றத்தாராகிய

பரதவர்கள், உள்ள தனது மனத்தினிடத்தே உண்டாகின்ற, அரவம் – மனக் கலக்கத்திற்கு (இவ்வொலி காரணமாகுமோ என,) நாணுவர் - மதித்தறிவர், என்று - என நினைத்து,

பெயர்ந்தாள் - இரவுக்குறி யிடம்வரைசென்று தலைமகனாகிய நின்னைக் காணாது திரும்பினாள் (என்று தோழி தலைமகற்குக் கூறினாள்.)

(விரி.) இடுமணல் - வினைத்தொகை. மான் – னகரவொற்றுச் சாரியை. கொடுங்குழை - பண்புத்தொகை யன்மொழி. சிறுகுடி - நெய்தனிலத் தூர். (59)

[தலைமகள் இரவுக்குறிக்கண் தலைமகன் தன்னைச் சார்ந்து பிரிந்தவழி உறக்கம் வாராமைகண்டு புலம்பித் தோழி கேட்ப வுரைத்தது.]

மணிநிற நெய்த லிருங்கழிச் சேர்ப்ப
னணிநல முண்டகன்றா னென்றுகொ
லெம்போற்
றிணிமண லெக்கர்மே லோதம் பெயரத்

துணிமுந்நீர் துஞ்சா தது.
60

(பத.) எம் போல் - (தலைமகனை இரவுக்குறிக்கண் சார்ந்து திரும்பிவந்து உறக்கங் கொள்ளாத) எம்மைப்போல, திணி - செறிந்த, மணல் எக்கர் - மணல்மேடுகளின், மேல் - மீது, ஓதம் - அலைகள், பெயர - மோதி நடக்கும்படி, துணி - (பெரியோர்களால்) துணிந்து வரையறுக்கப்பட்ட, முந்நீர் - மூன்று தன்மைகளையுடைய கடல், துஞ்சாதது - உறங்காமையை மேற்கொண்டது, மணிநிற நெய்தல் - நீலமணிபோன்ற நிறத்தையுடைய நெய்தற்பூக்கள் (மலர்ந்த,) இரும் கழி - பெரிய உப்பங்கழிகளையுடைய, சேர்ப்பன்- கடற்கரைத்தலைவன், அணி நலம்- தனது அழகிய நலமாகிய இன்பத்தை, உண்ணு - மேற்கொண்டு, அகன்றான் - நீங்கிவிட்டான், என்று கொல் - என்று நினைத்துத்தானோ? (என்று தலைமகள் தோழியை வினவினள்.)

(விரி.) கொல் - ஐயவினாப்பொருள். முத்தன்மை - படைத்தல், காத்தல், அழித்தல். இச் செய்யுளை, நச்சினார்க்கினியர் அல்லகுறிப் பட்ட தோழி இல்லு ளிருந்து சிறைப்புறமாகக் கூறியதென்பர். (தொல்.கள.42) (60)

கண்டிரண் முத்தம் பயக்கு மிருமுந்நீர்ப்
பண்டங்கோ ணாவாய் வழங்குந் துறைவனை
முண்டகக் கானனுட் கண்டே னெனத்தெளிந்தே

னின்ற வுணர்விலா தேன்.61

[தலைமகள், பெரிதாகிய இடையீட்டினுள் அரிதாகத் தலைமன் வந்த ஞான்றும், பெறாத ஞான்றைத் துன்ப மிகுதியாற் பெற்றதனையுங் களவு போன்று கொண்டு இகழ்ந்தது கூறியது.]

(பத.) கண் - கண்களிலுள்ள விழிகளைப்போல், திரள் - திரட்சியுற்றிருக்கும்படியான, முத்தம் - முத்துக்களை, பயக்கும் - கொடுக்கும்படியான, இரு - பெரிய, முந்நீர் - கடலினிடத்தே, பண்டம் கொள் - பொருள்களை ஏற்றுமதி செய்யும்படியான, நாவாய் - மரக்கலங்கள், வழங்கும் - வந்து போகும்படியான, துறைவனை - துறைமுகத் தலைவனை, முண்டம் கானலுள் - தாழைகள் சூழ்ந்த கடற்கரைச் சோலையினிடத்தே, கண்டேன் - (இன்று அரிதாகக்) காணப்பெற்றேன், (ஆயினும்) நின்ற - (இவனைக் காணுதல் முன்பு இன்பந்தருமென உணர்ந்து) நிலைபெற்றிருந்த, உணர்வு - உணர்ச்சியானது, இலாதேன் - (இப்பொழுது) இல்லாத யான், என -(புணர்ச்சி துன்பம் தரும்) என்ற, தெளிந்தேன் - தெரியலானேன் (என்று தலைமகள் கூறினாள்.)

(பத.) ஆய் இழாய் - ஆராய்ந்து செய்யப்பட்ட அணிகலன்களை யணிந்த தலைவியே! கண் உறு - கண்களின் தன்மையினைக் கொண்ட, நெய்தல் - நெய்தற்பூக்கள், கமழும் - மணக்கும்படியான, கொடும் - வளைந்து செல்லும்படியான, கழி - கடற் கால்வாய்களையுடைய, தண் - குளிர்ந்த, அம் - அழகிய, துறைவனோ - துறை முகத்துக்குரிய தலைமகனோ, தன் இலன் - தனது பழைய போக்கினை மேற்கொண்டிராதவனாய், வண்ணம் - அழகினையுடைய, கைபட்டதனை - அவன் கைகளில் நாம் அகப்பட்டுக் கொண்டதனை, ஆண்மை என - தனது ஆண்மையின்பாற்பட்ட செய்தி என்று, கருதி - எண்ணி இறுமாப்புற்று, பண் அமை - ஒழுங்காக அமைக்கப்பட்ட, தேர் மேல் - தேரின்கண்ணே அமர்ந்து, வரும் - (வரைதலை எண்ணாது) வாராநின்றனன் (என்று தோழி தலைமகளிடங் கூறினாள்.)

(விரி.) இரவுக்குறியினை வேண்டிவந்த தலைமகன் தலைமகளின் வீட்டு வேலிப்புறமாக நிற்பதைக் கண்ட தோழி தலைமகனுக்குக் கேட்கும்படியாக தலைமகளை நோக்கிக் கூறியதாகு மிது. ஓ – சிறப்புப் பொருள். ஆயிழை - வினைத்தொகை யன்மொழி. (63)

தெண்ணீ ரிருங்கழி வேண்டு மிரைமாந்திப்

பெண்ணைமேற் சேக்கும் வணர்வாய்ப் புணரன்றில்!
தண்ணந் துறைவற் குரையாய் மடமொழி
வண்ணந்தா வென்று தொடுத்து.
64

[வரைவிடைப் பொருட்பிரிவில் தலைமகன் நீட்டித்த வழித்தோழி அன்றிலோடு கூறியது.]

(பத.) தெள் நீர் - தெளிந்த நீரினைக் கொண்ட, இரும் - பெரிய, கழி - கடற்கால்வா யிடத்திலே, வேண்டும் - விரும்பிய வளவு, இரை - மீன் முதலிய உணவுகளை, மாந்தி - உண்டு, பெண்ணைமேல் - அருகிலுள்ள பனைமரத்தின் மீதே, சேக்கும் - தங்கும்படியான, வணர் வாய் - வளைந்த வாயினையுடைய, புணர் - இணை பிரியாத, அன்றில் - அன்றிற் பறவையே! மடமொழி - இளமையான மழலைச்சொற்களையுடைய தலைமகளின், வண்ணம் - (களவுப் புணர்ச்சியிற் கைக்கொண்ட) கன்னித் தன்மையாகிய அழகினை, தா என்று - திருப்பிக்கொடுத்துவிடுவாய் என்று, தொடுத்து - வேண்டிய மொழிகளை யடக்கி, தண் - குளிர்ந்த, அம் - அழகிய துறைவற்கு - துறைமுகத்திற்குரிய தலைமகற்கு, உரையாய் - (சென்று) சொல்வாயாக (என்று தோழி அன்றிற்பறவையிடம் கூறினாள்.)

(விரி.) வரைதற்கு வேண்டிப் பொருள் தேடச்சென்ற தலை மகன் கால நீட்டிக்க, தலைமகள் பொறாது வருந்த, அதனைக் கண்ட தோழி மனமுடைந்து கூறியதாகுமிது. அன்றில் - ஒருவகைப் புள். இஃது எக்காலும் இணைபிரியாது வாழுமியற்கை- யதாகலின், "புணரன்றில்" எனப்பட்டது. (64)

எறிசுறாக் குப்பை யினங்கலக்கத் தாக்கு
மெறிதிரைச் சேர்ப்பன் கொடுமை -
யறியாகொல்
கானக நண்ணி யருளற் றிடக்கண்டும்
கானலுள் வாழுங் குருகு.
65

[தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த காலத்துப் பிரிவு நீட்டித்துழித் தலைமகள் வருந்திக் கூறியது.]

(பத.) கானல் உள் - (யாங் களவுப் புணர்சியிற் கண்டு கூடிய) கடற்கரைச் சோலையினிடத்தே, வாழும் - தங்கியிருக்கும், குருகு - நாரைகள், ஏறி - துள்ளி விளையாடும், சுறா குப்பை - சுறாமீன் தொகுதியாகிய, இனம் - கூட்டமானது, கலக்க -

50

கலந்து சிதறும் படியாக, தாக்கும் - மோதும்படியான, எறி - வீசுகின்ற, திரை - அலைகளையுடைய, சேர்ப்பன் - கடற்கரைத் தலைமகனின், கொடுமை - (பிரியேன் என்று கூறிப் பிரிந்த) தீமையினை, கானகம் - காட்டு வழியிடத்தே, நண்ணி - பொருள் வேண்டிச் சென்று, அருள் - (என் மேலுள்ள மிகுந்த) அன்பானது, அற்றிட - இல்லாமல் காலநீட்டித்திட, கண்டும் - தெரிந்தும், அறியா கொல் - தெரிந்துகொள்ளமாட்டாவோ? (என்று தலைமகள் தனக்குட்டானே வினவி

வருந்தினாள்.)

(விரி.) தலைமகள் தான் அறிந்த தலைமகன் கொடுமையினைக் களவின் தொடக்க முதல் அருகிருந்த குருகுகளும் அறியும் என வருத்த மிகுதியாற் கூறினாள். (65)

நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த
பன்மீ னுணங்கல் கவருந் துறைவனைக்
கண்ணினாற் காண வமையுங்கொ லென்றோழி!
வண்ணந்தா வென்கந் தொடுத்து.
66

[வரைவிடைப் பொருட்பிரிவில் தலைமகன் நீட்டித்தவழித்தோழி தலைமகளோடு கூறியது.]

(பத.) என் தோழி - என்னுடைய தோழியாகிய தலைமகளே! நுண் - நுட்பமாகிய, ஞாண் -

கயிறுகளாலே பின்னப்பட்ட, வலையில் - வலையினாலே, பரதவர் - நெய்தல்நில மக்கள், போ தந்த - பிடித்துக் கொண்டுவந்த, பல் மீன் - பலவித மீன்களாகிய, உணங் கல்- கருவாட்டினை, கவரும் - (புட்கள் சென்று) பற்றிச்செல்லுதற் கிடமாகிய, துறைவனை - கடற்றுரைமுகத்துக் குரிய தலைமகனை, கண்ணினால் - நம் கண்களால், காண - காணும்படியாக, அமையும் கொல் - நீருமோ? (அங்ஙனங் காண நேருமாயின்,) தொடுத்து - (அவனை விடாது) பின்தொடர்ந்து, வண்ணம் - களவுப் புணர்ச்சியிற் கைக்கொண்ட) கன்னித் தன்மையாகிய அழகினை, தா - கொடுப்பாய், என்கம் - என்று நாம் கேட்போம் (என்று தோழி தலைமகனிடங் கூறினாள்.)

(விரி.) கொல் - ஐயவினாப் பொருள்.
போத்தருதல் - கொணர்தல். (66)

இவர்திரை நீக்கியிட் டெக்கர் மணன்மேல்
கவர்கா லலவன் றனபெடை யோடு
நிகரி லிருங்கழிச் சேர்ப்ப! என் றோழி

51

படர்பசலை யாயின்று தோள்.
67

[தலைமகன் தன்னை யருமைசெய்து தலைமகளை மறந்த காலை, தோழி அவனை எதிர்ப்பட்டுக் கூறியது.]

(பத.) இவர் - கரைமே லேறி வருகின்ற, திரை - அலைகளினாலே, நீக்கி இட்ட - கடலினின்றுங் கொண்டுவந்து போடப்பட்ட, எக்கர் - மேடகிய, மணர் மேல் - மணலிடத்தே, கவர் – இரு பிரிவாக அமைந்துள்ள, கால் - கால்களையுடைய, அலவன் - ஆண் நண்டானது, தன -

தன்னுடைய, பெடை - பெட்டை நண்டுகளுடனே, ஓடும் - ஓடி விளையாடும்படியான, நிகர் இல் - ஒப்பற்ற, இரும் - பெரிய, கழி - கடற்கால்வாய்களையுடைய, சேர்ப்ப - கடற்கரைத் தலைவனே! என் தோழி தோள் - என் தோழியாகிய தலைமகளின் தோள், (நின் பிரிவாலே,) படர் - படரப்பெற்ற, பசலையாயின்று - பசலை பூக்கப்பெற்று வருந்தாநின்றது. (நீ வந்து அப்பசலை யோயை நீக்குவாயாக, என்ற தோழி தலைமகனை வேண்டிக்
கொண்டாள்.)

(விரி.) நீக்கியிட்ட + எக்கர் = நீக்கியிட்டெக்கர்: அகரந் தொகுத்தல் விகாரம். "மணல்மேல் கவர்கா லலவன் தன பெடையொடும்," என்றது இறைச்சிப்பொருள். ஆயின்று - ஆயிற்று. (67)

சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய்
இறுமென் முரலநின் பிள்ளைகட்கே யாகி
நெறிநீ ரிருங்கழிச் சேர்ப்ப னகன்ற
நெறியறிதி மீன்றபு நீ.
68

{தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த காலத்துப் பிரிவு நீட்டித்துழித் தலைமகள் வருந்திக் கூறியது}

(பத.) சிறு மீன் - சிறிய மீன்களை, கவுள் - அலகிடையே, கொண்ட - வைத்துள்ள, செம் தூவி - சிவந்த இறகுகளையுடைய, நாராய் - நாரையே! இறும் - வருந்துதலையுடைய, மெல் -* லிய, குரல - ஒலியினையுடைய, நின் - உன்னுடைய, பிள்ளை கட்கு ஏ - குஞ்சுகளையே, ஆகி - கருதி, மீன் தபு - மீன்களைக் கொல்கின்ற, நீ - (களவுக்காலத்திலிருந்து எம்மைக் கண்டு கொண்டுள்ள) நீ, நெறி நீர் -

செல்லும் நீரினையுடைய, இரும் - பெரிய, கழி - கடற்கால்வாய்களையுடைய, சேர்ப்பன் - கடற்கரைத்தலைவன், அகன்ற - என்னைவிட்டுப் பிரிந்த, நெறி - முறையினை, அறிதி - நன்கு தெரிவாய். (ஆதலின், நீயே எனக் குற்ற சான்றாகுவை, என்று தலைமகள் நாரையினை நோக்கி நலிந்து கூறினாள்.)

(விரி.) ஏ - பிரிநிலைப் பொருளது. (68)

அறுபத்தொன்பதாவது, எழுபதாவது செய்யுட்கள் பழைய ஏட்டுப் பிரிதிகளின் சிதைவாற் காணப்பெறவில்லை.----------

நெய்தல் முற்றும்.

ஐந்திணை யெழுபது முற்றியது.

செய்யுள் எண்

செய்யுள் முதற்குறிப்பு அகராதி.

காரிகை 21

கார்ப்புடைப் 27

குருந்தலை 28

குறையொன்று 14

கேழலுழுத 11

கொடுவரி 39

கொல்லைப் 2

கொன்றைத் 22

கோள்வல் 38

துறை, சொற்றொடர் விளக்கம்.

வரைவு கடாதல் - மணம்புரிந்துகொள்ளும்படி தூண்டுதல்

வரைவு தலைவரல் - தலைமகனைச் சார்ந்தார் மணம் பேசிவரல்

வரைவு மலிதல் - மணப்பேச்சினை மேற்கொண்டு வரல் .

தலைமகன் சிறைப்புறத்தானாக - பாங்கியிற் கூட்டத்தினின்றும் பிரிந்த தலைமகன் தினைப்புனஞ் செல்லுந் தோழியினையும், தலைவியையும் சோலையின் வேலிப்புறமாக நின்று நோக்கினனாக.

இயற்பழித்தல் - தலைவனின் அன்பாகிய இயலுபினைக் குறைத்துக் கூறல்

மெலிவில் நயம் - துன்பங் கலவாத இன்பம்.

புணர்ந்து நீங்கும் - பாங்கியிற் கூட்டத்தாற் தலைவியைக் கூடிப் பிரியும்.

பகற்குறி - தோழியி னுதவியால்

பகற்கண்ணே தலைமனைத் தலைமகள் கண்டு கூடு மிடம். இது திணைப்புனத்தின் அருகிலுள்ள சோலைக்கண்ணதாகும்.

படைத்து மொழிக் கிளவி - புதிதாக வொன்றை அமைத்துக் கூறுஞ் சொற்றொடர்

மன்றத் துறுகல் - பலர் கூடும் வெளியில் பலரும் அமர்தற் குரியதாகப் பொருந்திய கற்கள்.

நிரைதொடி - கூடி நெருங்கிய வளையல்களை யணிந்த தலைமகள்.

வெறியாட் டெடுத்தல் - வேலற்குப் பூசையிடல்.

அறத்தொடு நிற்றல் - உண்மையினை எடுத்துச் சொல்லித் தவறாகக் காரியங்களை நிகழவொட்டாது நடத்தல் .

செங்கதிர்ச் செல்வன் - சூரியன்.

கொன்றைக் குழல் - கொன்றைப் பழத்தைத்

துருவித் துளைத்துச் செய்த குழல்.

செலவு - பொருள்வயிற் பிரிந்து செல்லுஞ் செலவு. ..

வரைவிடைப் பிரிவு - தலைமகளை மணத்தல் வேண்டி முலை விலைக்காகப் பொருள் தேடுவான் தலைமகன் மேற்கொண்ட பிரிவு.

உடன்போதல் - தலைவனுடன் பாலைநில வழியாகப் புறப்பட்டுப் போதல்.

செய் பெருஞ் சிறப்பு - பிறந்த புதல்வன் முகங் காண்டல், ஐம்படை பூட்டல், பெயரிடுதன் முதலியன.

உழலை மரம் - தொண்டுகட்டை; அன்று, தொழுவமரமெனலுமாம்.

தம்முறு விழுமம் - தாமுற்ற துன்பம்.

செவிலி மனப்போக்கு - காவலிற் கடுகுதல்.

முத்தன்மை - படைத்தல், காத்தல், அழித்தல்.

இடையீடு - தொடர்ச்சியற்ற நிலை.

அன்றில் - ஒருவகைப் புள்; இஃது எக்காலும் இணைபிரியாது வாழு மியற்கையது.

[எண் - செய்யுளெண்]

அயர்தல் - வருத்தமுறல் 11

அரவம் - ஒலி, மனக்கலக்கம் 59

அரா - பாம்பு 14

அரி - சிலம்பினுட் பெய்யுஞ் சிறுகற்கள் 42

அருவி - நீர்வீழ்ச்சி 2,7,11

அலமரல் - தடுமாறல் 15

அலர் - மலர் 58

அலர்மொழி - பழிச்சொல் 33

இகன்மை - மாறுபாடு 44

இடம் - இடப்பக்கம் 41

இணர் - பூங்கொத்து 6,18

இதல் - காடைப்பறவை 35

இமிர்தல் - ஒலித்தல் 3,12,15

இரா - இரவு 14

இரிதல் - திரிதல் 54

இவர்தல் - விரும்பல், 30

மேலெழுந்து நிற்றல் 42
இழை - அணிகலன் 28
இனம் - கூட்டம் 20
இனிது - நன்றாக, [கடவுள் வாழ்த்து.]
இன்னல் - துயரம் 37

இன்னே - இப்பொழுதே 14
இறால் - தேன்கூடு 10
ஈதல் - கொடுத்தல் 6
ஈரம் - இரக்கம் 34
உகளல்-குதித்து விளையாடல் 9

ஆமான் - காட்டுப்பசு 32
ஆயம் - பசுக்கூட்டம் 22
ஆயன் - இடையன் 28
ஆரிடை - அரிய பாலைவழி 31

ஆர்தல் - நிறைதல் 30
ஆர்ப்பு - ஆரவாரிப்பு 25
ஆர்வம் - காதல் 13
ஆலி - மழைத்துளி 19
ஆலுதல் - ஆடுதல் 19
ஆவி - உயிர் 19
ஆழி - மோதிரம் 59
ஆள்வினை - முயற்சி 38

உண்ணாட்டம் – ஆழ்ந்த ஆராய்ச்சி 53
உயங்கல் - வாடல் 42
உயிர் - உடலம் 18
உய்த்தல் - கொண்டுசேர்த்தல் 46
உரற்றல்- இடித்தொலித்தல் 17
உரும் - இடி 17
உரை - சொல் 14
உழக்கல் - சிதைத்தல் 47

உழத்தல் - முயலல் 25
உழிதரல் - சுழலல் 57
உழுதல் - முயல்தல் 30
உள்ளம் - மனம் 36
உள்ளுதல் - எண்ணுதல் 50
உறழுதல் – இடையிட்டுக் கிடத்தல் 50
உறை - மழைத்துளி 18
உறைதல் - வாழ்தல் 54
உற்றது - பொருந்தியது 49
உன்னல் - நினைத்தல் 33
உகிர் - நகம் 34
உணங்கல் - வாடல், 39
கருவாடு 66
உணர்தல் - தெரிதல் 57

எக்கர் - மேடு 59

எண் - அளவு 52

எண்கு - கரடி 34

எயிறு - பல் 21

எரி - நெருப்பு, 18

காட்டுத்தீ 37

எல்லி - இரவு 24<

எவ்வம் - தவறு 55

எழில் - அழகு 16,18

ஏங்கல் - குறை இரந்து நிற்றல் 52

ஏதம் - துன்பம் 14

ஏதில்மகளிர் - பிறமகளிர் 44

ஏமம் - அரணம், பாதுகாவல் 14

ஏர் - ஏர்பு, எழுதல் 24

கடவு - வழி 39

கடு - மாவிலங்குமரம் 39

கடுகல் - விரைதல் 30

கடுமான் - விரைந்து

கடுவன் - ஆண்குரங்கு 11

கண் - கணு 43, இடம் 51

கண்ணோட்டம் - அருட்பார் வை 6

கண்படுதல் - உறங்கல் 34

கதழ்வு - விரைவு 18

கதுவுதல் - பற்றுதல் 1

கமழ்தல் - மணத்தல் 6,27

ஊதியம் - நன்மை 57

ஊதை - காற்று 57

ஊராண்மை - பெரியகாரியம் 54

ஊன் - இறைச்சி 45

ஏர் - அழகு 51

ஏனல் - தினை 1,13

ஐம்படை - திருமாலின்

ஐவகைப் படை போன்றமைந்த

கழுத்தணிகலம் 43

ஐவனம் - மலைநெல் 12

ஒண்மை - நன்மை, 40

நிறம் 50

ஒல்லுதல் - முடிதல் 42

ஓதம் - வெள்ளம் 52, அலை 60

ஓதை - ஒலி 48
ஓமை - மா மரம் 37
ஓர் - ஒப்பற்ற 51
ஓர்தல் - நினைத்தல் 50

கா - சோலை 13
காணல் - செய்தல் 44
காதல் - அன்பு 52
காய்தல் - சினத்தல் 7
காரிகை - அழகு 21
கார் - கார்காலம், 15,17
முகில் 19
கார்ப்பு - மழை 27
கால் - அடிப்பாகம் 12
கானம் -பாலைநிலவழி 35
கானகம் - குறிஞ்சிநிலம் 1
கயம் - நீர், குளம் 5

கரத்தல் - மறைத்தல் 15

கலி - ஒலி 23

கலை – கல்விப்பொருள்

[கட வுள் வாழ்த்து.]

கல் - மலை 2;நடுகல் 29

கவரி - ஒருவகை மான் 1

கவினல் - அழகுறல் 24

கவினுதல்-அழகு பெறுதல் 2

கவுள் - அலகு 68

கவ்வை - காரியம் 35

களைதல் - ஒழித்தல் 49

கள்ளமனம் - வஞ்சகம் 62

கள்ளர் - ஆறலைப்போர் 36

கறி - மிளகுகொடி 8

கழறுதல் - வற்புறுத்திக் கூறல்

கழி - கடற் கால்வாய் 63

களிறு -ஆண்யானை 12

கூத்து - நாடகம் 45

கூந்தல் - பெண்மயிர் 48

கேண்மை - நட்பு 5,12,13

கேழல் - பன்றி 11

கைப்படல் - அகப்படல் 63

கொடுமை - வளைவு 62

கொடுவரி - புலி 39

சாலுதல் - அமைதல் 45

சான்றவர் - அமைந்தார் 5

சிறு குடி - நெய்தனிலத் தூர் 59

சிறுகுடியர் - பரதவர் 59

கானல்-கடற்கரைச்சோலை 59

கான்யாறு - காட்டாறு 7

கிளப்பல் - சொல்லல் 49

கிளை=கிள்ளை - கிளி 13

கிளை - கூட்டம் 34

குஞ்சரம் - யானை 31

குத்தல் - கொத்துதல் 33

குரல் - கதிர் 1, 3,

ஒலி 23

குருகு - பறவை 57

நாரை 65

குழல் – சுருட்டி முடிக்கப் படுவது 48

குழுமல் - கூடித்திரிதல் 38

குழை - காதணி 59

குளவி - காட்டு மல்லிகை 3

53 குறும்பு - பாலைநிலத் தூர் 40

குன்று - மலை 9

கொல்லுநர் - கொல்வார் 17

கொல்லை - தோட்டம் 2

கொளை - கொள்ளப்படுதல் 56
கோடல் - வெண்காந்தள் 17
கோண்மா - களிறு 39
கோல் - அம்பு 11
கோவலர் - இடையர் 22

சூலுதல் - கருக்கொள்ளுதல் 19
சூழ்தல் - நெருங்கல் 31
செய் - கழனி 46
செறுதல் - சினத்தல் 5
சினம் - சீற்றம் 15
சுரம் - பாலைநிலம் 32
சுரும்பு - வண்டு 12,28
சுறா - சுறாமீன் 65
சுனை - மலையின்கண் நீர்நிலை 8
சூரல் - பிரப்பம் புதர் 35

தபுதல் - கொல்லல் 68

தமர் - தம்மவர் 51

தழங்கல் - ஒலித்தல் 23

தளர்தல் - நெகிழ்தல் 47

தளவு - செம்முல்லை 24
(கடவுள் வாழ்த்து)

தளிர்த்தல் - தழைதல் 20

தடம் - பெருமை 16

தண் - குளிர்ச்சி 8

தூவி - இறகு 57

தெருள் - தெளிவு 35

தெவுட்டல் - நிறைதல் 39

தெளிவு - விளக்கம் 13
தேமா - தித்திப்பு மாமரம் 8

நசை - விருப்பம் 31
நண்ணல் - நெருங்கல் 40
நயம் - ஈரம் 2; இன்பம் 5
நல்குதல் – கொடுத்தல்
நளி - குளிர்ச்சி 6
நறும் - மணத்தினையுடைய 17
நாணுதல் – மதித்தறிதல் 59
நாண் - வெட்கம் 32
நாவாய் - மரக்கலம் 51

சேரி - சிற்றூர் 54
சேவல் – ஆண்கோழி 35
சோர்தல் – துன்புறுதல் 62
ஞெமுக்குதல் - நெருடுதல் 47
ஞாண் - கயிறு 66
ஞான்று - நாள் 61

தேம் - தேன் 7; நறுமணம் 47
தேரை - தவளை 23
தொடி - வளையல் 10,55
தொடை - தொடுத்தல் 29
தாது – பூந்துகள் 18
தாமம் - மலர்மாலை 44
தாளாண்மை - ஊக்கம் 29

தாள் - அடிப்பாகம் 38

திகழ்தல் - காணுதல், 5

விளங்கல் 13

திணிதல் - செறிதல் 60

திண்ணிதின் - நன்றாக 17

திரள் - திரட்சி 61

நீத்தல் - துறத்தல், பிரிந்து செல்லல் 16

நீயிர் - நீங்கள் 52

நீர் - தன்மை 13

நுதல் - நெற்றி 37

> நெஞ்சு - மனம் 5,34,57

மார்பு 11

நெறி - வழி 36

நெறிதல் - அலைதல் 67

திரை - அலை 57

திறம் - மேன்மை 49

ஒழுக்க முறை 55

தீர்த்தல் - விட்டொழித்தல் 53

துகைத்தல் - மிதித்துழக்கல் 10

துஞ்சல் - துயிலுதல், உறங்கல்12,70

பசலை – காதலாலுண்டாம்

மேனி மாற்றம் 67

படப்பை - தோட்டம் 35

படர்தல் - செல்லல் 36

பட்டம் - மேலாடை 43

பணை - மூங்கில், 16

பிழைத்தல் - தவறல் 31

பிளிற்றல் - ஒலித்தல் 35

59

துடித்தல் - துயருறல் 12

துணை - காவல் 55

துருவல் – நெருக்கிப் பிடித்தல்

துவன்றுதல் - நெருங்குதல் 52

துளும்பல் - அசைதல் 8

துறத்தல், பிரிந்துசெல்லல் 21

புலத்தல் – ஊடல் 50

புல்லுதல் - தழுவல் 17

புள் - பறவை 59

புறவு - முல்லைநிலம் 19,24

புனம் - கொல்லை 20
புனல் - நீர் 52
பூ - அழகு 41
புயல் - மழைப்பெயல், முகில் 20
பேழ்வாய் - பிளந்தவாய் 31
பெண்ணை - பனைமரம் 64
பெயர்தல் -ஊர்தல் 28
திரும்பல் 59
பொங்கல் – களித்துத் திரிதல் 20
பொதியில் - மன்றம் 31
பொதும்பு - சோலை 3
பொய் - வஞ்சகம் 50
பொய்கை - மலர்த்தடம் 45
தடாகம் 54,57
பொருந்தினார் – காதலரோடு
கூடிவாழும் காதலியர் 12
பொலம் - பொன் 55

பொறி - தலைச் சூட்டு 33
செல்வம் 43
பிள்ளை - குஞ்சு 68
பின் - மறுமை 5
பீர் - பீர்க்கஞ்செடி 34
பீலி - தோகை 19
புகர் - அழகு 37
புகல் - அடைக்கலம் 48
புணர் - இணை 64
புதல் - புதர் 24
புதல்வன் - மகன் 47

மகிழ்நன் - மருத நிலத் தலைவன் 48
மஞ்ஞை - மயில் 16

மடம் - அறியாமை 8

மென்மை 69

மயங்கல் - கலத்தல் 20

மரல் - மருள்செடி 33

மராம் - மராமரம் 12

மருள் - மாயம் 56

மரையான் - மான் 10

மலிதல் - மிகுதல் 48

மறி - ஆட்டுக்குட்டி 13

மறு - பாழ், குற்றம் 34

மனை - வீடு 34

மன்றம் - பலர்கூடும்வெளி 9

மன்று - மக்கள் முதலானோர்

சென்று தங்குமிடம் 4

மா - விலங்கு 38

யாணர் - புதுவருவாய் 49

வணர் - வளைவு 64

வண்ணம் - அழகு 63

60

பொன் - திருமகள் 48

அழகு 58

போத்தருதல் - கொணர்தல் 66

போத்து - போது -நேரம் 45

போர் - சண்டை 35

பேதமை - அறியாமை 44

பேதை - பெண் 48

பேதையர் - அறிவிலார் 51

மாந்தல் - தின்னல் 12

மேய்தல் - 46; உண்ணல் 64

மார்பு - நெஞ்சம் 51

மாலை - அந்திவேளை 17

மால் - காதல் 46

மீளி - வீரம் 38

முகன் - மனப்போக்கு 58

முசு - ஒருவகைக் குரங்கு 9

முண்டகம் - தலை [கடவுள் வாழ்த்து.]

முதுமரம் - ஆலமரம் 40

முத்தம் - முத்து 61

முந்நீர் - கடல் 60

முயங்கல் - தழுவல் 52

முழங்கல் - ஆரவாரித்தல் 22

மெலிவு - வருத்தம், குறைவு 5
மொய்ம்பு - வலிமை 38

வாடுதல் - குறைதல் 21
வாயில் - காரணம் 29
வார் - நீண்ட 13
வதிதல் - தங்கல் 46
வயங்கல் - விளங்கல் 6
வயம் - வெற்றி 38
வயல் - கழனி 47
வரி - நீளம், இரேகை 37
வரை - மலை 3,10
வரைதல் - மணம்புரிதல் 10
வலன் - வலப்பக்கம் 33

வேட்டல் - விரும்பல் 14
வேலன் - தேவராளன் 13
வைகல் - நாடொறும் 55